Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி பதிவுபெற்ற எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி வைகாசி 31 ஆம் நாள் ஸபர் 2 (13-6-64) சனிக்கிழமை இதழ் 125

யாழ். புகையிரத நிலையத்தில்
உங்கள்
விளம்பரப் பலகைகள்
இடம் பெறவேண்டுமா?
அப்படியானல்
யாழ். அட்வட்டைஸிங் சேவிஸாருடன்
தொடர்புகொள்ளவும்.
50, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

# ஸ்ரீமதி விவியன் உட்பட

# மூன்று உதவி மந்திரிகள் இன்று பதவி ஏற்கலாம் என அறிவிப்பு

கொழும்பு, சனி

புதிய கூட்டு அரசாங்கத்தின் உதவி மந்திரிகள் இன்று பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

மூன்று புதிய உதவி மந்திரிகள் நியமிக்கப்படவிருக்கிருர்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

பொறலை எம். பி.யும், திரு. லெஸ்லி குணவர்த்தனவின் மனைவியுமான ஸ்ரீமதி விவியன் குணவர்த்தன, செனெட்டர் சந்திரா குணசேகரா, கம்யூனிஸ்ட்கட்சியைச் சேர்ந்த திரு. ஸ்டான்லி திலகரத்ன ஆகியோரின் பெயர்கள் இவ்விஷயமாக அடிபட்டு வருகின்றன.

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி - லங்கா சமசமாஜக்கட்சியின் கூட்டு அரசாங்கத்தை திரு. ஸ்டான்லி, ஆரம்பமுதல் ஆதரித்து வந்தார்.

## நிதிமந்திரி என். எம். யாழ்ப்பாணம் வருகிறர்

யாழ்ப்பாணம், சனி

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டு சேர்ந்து நிதி மந்திரியாகப் பதவியேற்ற பின் டாக்டர் என். எம். பெரேரா அடுத்தவார இறுதியில் முதல் தடவையாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவிருக்கிறர்.

கூட்டு அரசாங்கம் அமைக்கப்பட்டபின் யாழ்ப்பாணத்தில் நிலவும் அரசியல் நிலையை அறிந்து கொள்ளவும் புதிய வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்கத் தொடங்குவதற்கு முன்பாக யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள தொழிற் சங்கக் கிளைகளினது அபிப்பிராயத்தை அறிவதற்காகவும் டாக்டர் என். எம். பெரேரா யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வதாக அறியப் படுகிறது

டாக்டர் பெரேராவுடன் நிதி அமைச்சு அதிகாரிகள் சிலரும் யாழ்ப்பாணத்துக்கு வருவார்களென அறியப்படுகிறது.

## நிதிமந்திரியை மேயர் பேட்டி காண்பார்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண மாநகரசபை சம்பந்தமாகவும், இங்குள்ள கஷ்டங்களை போக்குவதற்கான நிதி உதவி பற்றியும் புதிய நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேராவை சென்று பேட்டிகாண உத்தேசித்திருப்பதாக, யாழ்ப்பாண மேயர் திரு. ரி. எஸ். துரைராஜா, நேற்றுமாலை நடைபெற்ற மாநகரசதபக் கூட்டத்தில் பேசும்போது கூறினர்.

நிதி மந்திரியாக டாக்டர் என். எம். பெரேரா நியமிக்கப்பட்டதை பாராட்டி, திரு. எஸ். நாகராசா சபையின் அனுமதியிடன் கொண்டு வந்த தீர்மானம் பற்றி பேசும் போதே மேயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்றுமாலை யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர் திரு. ரி. எஸ். துரைராசா தலைமையில் மாநகர சபைக் கூட்டம் நடைபெற்றபோது, உள்ளூராட்சி சேவையிலிருந்து அனுபவம் பெற்ற ஒருவர் நிதிமந்திரியாகத் தெரிவு செய்யப்பட்டதற்கு யாழ்ப்பாணம் மாநகர சபை பாராட்டுவதுடன், உள்ளூராட்சி மன்றங்களைப் பற்றி நன்கு தெரிந்த நிதி மந்திரி, அவற்றிற்கு தேவையான சேவையை செய்வாரென எதிர்பார்ப்பதாகவும், திரு. எஸ். நாகராசா ஒரு தீர்மானத்தை கொண்டு வந்தார்.

இது சம்பந்தமாக சபை முதல்வர் திரு. ரி. எஸ். துரைராசா பேசியதாவது:-

கொழும்பு மாநகரசபையில் பல வருடகாலம் பணியாற்றி அனுபவம் வாய்ந்த ஒருவர் நிதி மந்திரியாகத் தெரிவு செய்யப்பட்டது, ஸ்தல ஸ்தாபனங்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். இலங்கையிலுள்ள சிங்கள தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமைக்கும் அபிவிருத்திக்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் கடந்த காலத்தில் அவர் பாடுபட்டு வந்தார். அந்த வழியிலேயே தொடர்ந்து பணியாற்றி தமிழ் பேசும் மக்களின் குறைகளைத் தீர்த்து வைப்பாரென நம்புகின்றோம். கஷ்டமும் நெருக்கடியுமான இந்த நேரத்தில், கஷ்டப்பட்டு துணிச்சலுடன் நிதிமந்திரி பதவியை ஏற்றூர். அதே துணிச்

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். தொழிற்சங்கங்கள் புதிய நிதிமந்திரிக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், சனி

புதிய நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேராவுக்கு யாழ்ப்பாணத்திலுள்ள பல தொழிற்சங்கங்கள் பூரண ஒத்துழைப்பையும், ஆதரவையும் தெரிவித்துள்ளன.

அரசாங்க இலாகாத் தொழிலாளர் சங்க சம்மேளன யாழ்ப்பாணக் கிளை, புதிய நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேராவுக்கும், பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கும் அனுப்பியுள்ள செய்தியில், முற்போக்குச் சக்திகளைக்கொண்ட அரசாங்கத்திற்கு ஆதரவைக் கொடுப்பதென்று தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் வரவு செலவுத் திட்ட அறிக்கை, தொழிற்சங்கங்களின் பூரண ஆதரவைப் பெறக்கூடியதாய் இருக்குமென்றும் எதிர்பார்க்கப்படுவதாகவும் அச்செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

அகில இலங்கை சுகாதார தொழிற்சங்க யாழ்ப்பாணக் கிளைத் தலைவர், புதிய நிதி அமைச்சருக்கு அனுப்பியுள்ள செய்தியில் நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமல் இருந்துவந்த சுகாதார சேவையாளரின் அநேக குறைகள் உட்படத் தொழிலாளர்களின் பொதுக் கோரிக்கைகள், தாங்கள் நிதி அமைச்சராகப் பதவியேற்றதன் மூலம் தீர்க்கப்படலாம் என்று கருதுகின்றேம் என்று தெரிவித்துள்ளார். புதிய கூட்டரசாங்கத்திற்குப் பூரண ஆதரவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமராமத்து இலாகாத் தொழிலாளர் சங்கம், வட இலங்கை கிருஷிகத் தொழிலாளர் சங்கம், அரசாங்க மின்சார இலாகாத் தொழிலாளர் சங்கம், ஐக்கிய தபால் தந்தித் தொழிலார் சங்கம் ஆகியவை புதிய நிதிமந்திரியான டாக்டர். என். எம். பெரேராவுக்குப் பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும்வழங்குவதாக அறிவித்துள்ளது.

## ஞாபகச் சின்னத்துக்கு ஒரு கமிட்டி

புதுடில்லி, ஜூன் 12

ராஜ்காட்டில் உள்ள நேருவின் சமாதியில் தக்க ஒரு ஞாபகச் சின்னம் அமைக்கப்படும் என்றும் இதற்காக விரைவில் ஒரு கமிட்டி நியமிக்கப்படும் என்றும் பிரதம மந்திரி சாஸ்திரி தெரிவித்தார்.

## 20000 அனுதாப தந்திகள்

புதுடில்லி, ஜூன் 12

நேரு காலமானதை முன்னிட்டு ஜனதிபதி ராதாகிருஷ்ணனுக்கு உலகெங்குமிருந்து 20000க்கு மேற்பட்ட தந்திகளும், கடிதங்களும் வந்திருக்கின்றன. இன்னும் வந்து கொண்டிருக்கின்றன.

## தமக்கு பாதுகாவலர் தேவையில்லை என்கிறர் புதிய நிதிமந்திரி

## நாடுமுழுதும் பாராட்டு செய்திகள்

கொழும்பு, வெள்ளி

புதிய நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேரா தமக்கு பாதுகாவலர் எவரையும் வைத்துக்கொள்ள மாட்டார். "என்னைப் பாதுகாத்துக் கொள்ள என் உடம்புக்குச் சக்தி இருக்கிறது" என அவர் கூறினர்.

நேரறிரவும், இன்று காலையும் அவருக்குப்பாராட்டு தெரிவிக்கும் பொருட்டு ஏராளமானேர் என். எம்.மின் வீட்டுக்கு விஜயம் செய்தனர்.

நேற்றிரவு நண்பர்களும், எம். பிக்களும் கட்சி ஆதரவாளர்களும் அவர் இல்லத்துக்குச் சென்றபோது டாக்டர் பெரேரா, தனது 'அல்செஷன்' நாயுடன் படுக்கையில் படுத்து நன்ருக உறங்கிக் கொண்டிருந்தார். நாடுமுழுதுமிருந்து அவருக்கு 300க்கதிகமான பாராட்டுத் தந்திகளும், 500க்குமேற்பட்ட டெலிபோன் 'கால்'களும் கிடைத்தன.

இன்று காலை 10-15க்கு டாக்டர் பெரேரா தமது காரி

(8-ம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக் கட்சியிலிருந்து ஓரு. எம். பி. ராஜினமா

## கூட்டரசாங்கத்திற்குஎதிராக நடவடிக்கை

கொழும்பு, வெள்ளி

கட்டுகம்பளை எம். பி. திரு. லீலானந்த விரசிங்க இன்று ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து ராஜினமாச் செய்தார். லங்கா சமசமாஜக் கட்சியுடன் சேர்ந்து கூட்டரசாங்கம் அமைக்கப்பட்டதை எதிர்த்து அவர் ராஜினமாச் செய்திருக்கிறர்.

கூட்டு அரசாங்கம் அமைக்கப் பட்டால், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து தாங்கள் ராஜினமாச் செய்யப் போவதாய் பிரதமரைப் பயமுறுத்திய 13 எம். பி.க்களில் திரு. வீரசிங்காவும் ஒருவர். திரு. வீரசிங்காவைத் தொடர்ந்து மற்றும் பலர் ராஜினமாச் செய்வார்களென வதந்திகள் உலாவுகின்றன.

திரு. வீரசிங்கா 1960 தேர்தலில் சுயேச்சை அங்கத்தினராகப் போட்டியிட்டவர். திரு. ஆர். ஜி. சேனநாயகாவின் ஆதரவுடன் தேர்தலில் ஜயித்த அவர் பின்பு ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியில் சேர்ந்தார்.

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திறமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்
எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

## வரி விளம்பரம்

### தேவை

யாழ்ப்பாணக் குடாநாடு பூராவும் கிராமத்திற்கு ஒரு ஆள் தேவை. 3 சதவீதம் கொமிஷன் கொடுக்கப்படும். ரூ. 100-00 கட்டுப் பணத்துடன் நேரில் சமுகமளிக்கவும். கொழும்பு பிளான் ஜுவலறி கவுஸ், நல்லூர், யாழ்ப்பாணம். தொலைபேசி: 461 493

---

இலங்கை வங்கிக்கு அல்லது மக்கள் வங்கிக்குப் போதிய சரியான ஆதன உறுதிப் பிணை கொடுத்து அரசாங்கத்திடம் நெல் எடுத்து கிழமைக்கு 2000 புசல் கோட்டா வேலை செய்யும் யாழ்ப்பாணம் - கண்டி றோட் அருகாமையிலுள்ள மில்லுகளை கொமிஷனுக்கு அல்லது குத்தகைக்கு நடத்தக்கூடிய தகுதியுள்ளவர்கள் 20-6-64க்குள் மனுப்பண்ணவும். பொருளாதார முன்னணி மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். 508

---

### ஹோமியோபதி வைத்தியர்களின் கவனத்திற்கு!

டாக்டர் கரீமின் சிறந்த டானிக்குகள், (1) Golden Vigour Tonic (தங்கசத்திதிராவகம்) நரம்பு தளர்ச்சியைப் போக்கி வாழ்க்கையை ஆனந்தமாக அனுபவிக்கச் செய்யும். (2) Golden Iron Tonic (அயத் தங்க திராவகம்) பாண்டு, இரத்தசோகைமுதலிய இரத்த சம்பந்தமான வியாதிகளைப் போக்கி நல்ல இரத்தத்தை விருத்தி செய்யும். பத்தியம் இல்லை. நல்ல சத்துள்ள சாப்பாடுகள் சாப்பிடவேண்டும். ஒரு மாதம் தொடர்ந்துமருந்து சாப்பிட்ட பின் திருப்தி இன்றேல் பாவித்த போத்தல்களை கொடுத்தால் பணம் வாபஸ் செய்யப்படும். Sole Agents: M. M. L. Muhamad Abdul Cader Hadjiar & Sons, 91—93, K. K. S. Road, Jaffna. 511

---

### கபிரியேல் தயாரிப்புகள்

1. கபிரியேல் பெயின் ஓயில் சகல நோவு, வீக்கம், வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.
2. கபிரியேல் ஓயின்மென்ற் சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண் களிம்பு.
3. கபிரியேல் ஸ்பெஷல் பாம் தடிமன், தலையிடி, சந்துவலி போன்ற எல்லா வேதனைகளையும் தணிக்கவல்லவிசேஷ பாம்.

தயாரிப்பாளர்கள் :
கபிரியல்வைத்தியசாலை, சுன்னாகம்
GABRIELS. Chunnakam. 275

---

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனாம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்

---

## மரண அறிவித்தல்

### திரு. வி. எஸ். நாகலிங்கம்

முன்னாள் வட ஓம்மினி பஸ் கம்பனி நிர்வாகஸ்தரும், சிவயோகத்தின் அருமைக் கணவரும், தியாகராசா (இ. போ. ச. யாழ். மேற்கு நிலயம்), மூதூர் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த விசயகாந்தன், அகிலேஸ்வரி, நாகேஸ்வரி, புவனேஸ்வரி, சோமேஸ்வரி ஆகியோரின் தந்தையும், மட்டு நகர் சௌக்கிய பகுதி நடராசாவின் மாமனாரும், திரு. சேனாதிராசாவின் மைத்துனர் ஆகிய திரு. வி.எஸ்.நாகலிங்கம் காலமாகிவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-ந் திகதி காலை 10-00 மணிக்குக் கோம்பையன் மணல் மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உறவினரும் நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும். நா. தியாகராசா, "திணைப்புனம்", 122, கோவில் வீதி, நல்லூர்.

## ரயில் டிக்கட்டுக்கு தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், வியாழன்

அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கும், துணிகளுக்கும் நாட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கும் இந்த நெருக்கடியான நேரத்தில் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் பிரயாணச் சீட்டுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

நேற்று முன்தினம் மாலை சாவகச்சேரிக்குச் செல்வதற்காக ஒரு பிரயாணி டிக்கட் கேட்டபொழுது, சாவகச்சேரிக்கான டிக்கட்டுகள் இல்லையென்றும் சங்கத்தானைக்கு டிக்கட் எடுக்கும்படி யாழ்ப்பாண புகையிரத நிலையத்தில் கடமையாற்றிய உத்தியோகத்தர் கூறியதாகவும் இதனைத் தொடர்ந்து அப்பிரயாணி வேறுவழியின்றி சங்கத்தானைக்கு டிக்கட் எடுத்துச் சென்றார் என்றும் தெரியவருகிறது.

---

## வானொலி நிகழ்ச்சிகள்

### சனி 13-6-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00,

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 7-15 குரல் வகை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதம்.

பகல் 12-00 இடைவேளை, 1-00 கதம்பம்.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர்மன்றம், 5-45 திரைஇசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 7-00 பாட்டு — லக்ஷ்மிதேவி பாலகிருஷ்ணன், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 8-45 ஹிந்துஸ்தானி சங்கீதம், 9-15 'சேக்கிழாரின் காவியம்' — வி. நல்லையா, 9-30 வயலின் — ருத்திராணி நல்லைநாதன், 10-00 நேயர்விருப்பம்.

### ஞாயிறு 14-6-64

காலை 6-45 உதய கீதம், 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை— எஸ். தேவாரோக்கியம், 7-15 குரலிசை, 7-45 மெல்லிசை, 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானாஞ்சலி (மறு ஒலிபரப்பு) முஸ்லிம் பாடசாலை,

பகல் 11-30 சிறுவர் மலர், 12-15 நேயர் விருப்பம், 1-00 மாதர் நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு —எஸ். பாலசிங்கம், 5-45 திரை ஒலி, 6-10 இடைவேளை சங்கீதம், 6-15 தாளவாத்தியக்கச்சேரி, 6-45 பாட்டு— யோகேஸ்வரி ராசையா, 7-30 நாடகம்: 'அன்புருவம்,— பாலாம்பிகை நடராசா, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 மாணவர் மன்றம், 8-30 நேயர்விருப்பம், 9-15 மாதர் விரும்பியவை, 9-45 தேர்ந்த இசை, 10-00 நிலைய ஒலிப்பதிவு.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

### சனி 13-6-64

காலை 6-30 மங்கள இசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப்பாடல், 7-30 வயலின்,

பகல் 1-00 பிள்ளைக்கனி அமுது, 1-20 கதம்பம், 2-10 வயலின்.

மாலை 5-15 திரைப்பட இசை, 6-20 கிராம நிகழ்ச்சி, 7-30 நாடகம்: 'மனக்குகை', 9-30 அகில பாரத சங்கீத நிகழ்ச்சி.

### ஞாயிறு 14-6-64

காலை 6-30 மங்களஇசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப்பாடல், 8-15 பாட்டு — சுலோசனு பட்டாபிராமன்.

பகல் 12-00 சூரியகாந்தி, 1-00 மணிமலர், 2-10 பெண்ணுலகம்.

மாலை 5-15 பாட்டு — காரைக்குடி ஆர். பாலகிருஷ்ணன்.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சி, 7-30 பேச்சு, 7-45 போழகுடி பி. வி. கணேசையர், 9-45 சங்கீதஉபந்நியாசம்—ஜி. பாலசுப்பிரமணியபாகவதர்.

## 'நூல்நிலையங்கள் சிலருக்கு மட்டும் சொந்தமல்ல'

— பேராசிரியர் ஜெயசூரியா

கண்டி, வெள்ளி

"கால் சட்டையணிந்த ஒரு சில வகுப்பினருக்கு மட்டுமே நூல் நிலையங்கள் சொந்தமானால், அதற்கு எவ்வித பெறுமதியும் கிடையாது" என்று இலங்கை பல்கலைக்கழக பேராசிரியர் திரு. ஜே. ஈ. ஜெயசூரியா 'தேசிய முன்னேற்றத்தில் சுதந்திரத்தின் பங்கு என்றும் விஷயம் பற்றி பேசும்போது கூறினார்.

தேசிய நூலகவாரம் சம்பந்தமாக கண்டியிலுள்ள டி. எஸ். சேனநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போதே திரு. ஜெயசூரியா மேற்கண்டவாறு கூறினார்.

டாக்டர் ஜெயசூரியா தொடர்ந்து கூறியதாவது:— எனது பேச்சு கண்டி மாநகர சபை அங்கத்தவர்களுக்கு உதவக்கூடுமென நினைத்தேன். ஆனால் அங்கத்தவர் ஒருவராவது இங்குசமுகமளிக்கவில்லை. தேர்தல் சமயத்தில் வாக்குப் பெறும் பொருட்டு அங்கத்தவர்கள் மக்களிடம் வரும்போது அவர்களுக்கு நல்ல பாடம் கற்பிக்கத்தவறக்கூடாது. தேசியமுன்னேற்றத்திற்கு பணமும், யந்திரங்களும் முக்கியமாகத் தேவைப் படுகின்றன. ஆனால் இலங்கையில் இவற்றிற்குப்பதிலாக போதியளவு உடல் உழைப்பு மட்டுமே இருக்கிறது. இந்த உடல் உழைப்பை நாட்டின் முன்னேற்றத்திற்காக எப்படிப்பயன் படுத்தலாம் என்பதை தெரிந்து கொள்ளவேண்டும்.

— —

## கள்ளிறக்குவதில் பயிற்சி

மக்கோன, வெள்ளி

கள்ளிறக்கும் தொழிலில் பயிற்சியளிக்கும் திட்டம் நாககடுவ, பேருவலை ஆகிய இருஇடங்களில் தொழில் இலாகாவினால் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மிகத்துரிதமாக முன்னேறிவரும் இத்திட்டம் உள்நாட்டில் கள்ளிறக்குவோருக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நீக்குமெனக் கருதப்படுகிறது.




எஸ் - லொன்
இன்றைய அதிசயமான பைப்

இதுவே ஒரு உண்மையான பல-பயன் தரும் பைப்.... திண்மையானது கனக்குறைவானது, மலிவானது, கையாள்வது சுலபம், உக்காது கறையான் அண்டாது, அரிப்பேற்படாது, கிருமி, கறள், அழுக்குப்படல எதிர்ப்புடையது. எஸ்-லொன் மின்சார கொண்டுயிட் வேலை உட்பட பெரும்பாலான வீட்டு, கைத்தொழில், விவசாய உபயோகத்திற்கு சிறந்த ஒப்பற்ற பைப்.

பைப் வேலை, உங்களுக்கு உண்டானால் அதற்கு உகந்த பைப் எஸ்லொன்தான் ஆகவே இன்றே எங்குமுள்ள சிறந்த ஸ்டோர்களில் அதைக் கேட்டு வாங்க நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்.
மகாராஜா கட்டிடம்.
பேங்ஷால் வீதி, கொழும்பு-11.





மைல் கணக்காக நடக்கவும், மணித்தியாலங்களாக நிற்கவும், மலர் இதழ் போன்ற, பஞ்சு மெத்தை சொகுசுள்ள இலஸ்டோ காலணிகள் அணியுங்கள்.

இலஸ்ட்டோ காலணிகள் அணிவதனால் பாத எரிச்சலின்றி வெகு தூரம் நடக்கவும், பல மணித்தியாலங்கள் நிற்கவும் இயலுகிறது. சோர்வுற்ற பாதங்களுக்கு மலர் இதழ் போன்ற, பஞ்சு மெத்தை சொகுசுள்ள இலஸ்ட்டோ காலணிகள் பாதங்களுக்கு குளுமையும், சௌகரியத்தையும் அளிக்கின்றன. இலஸ்ட்டோ காலணிகளை கேட்டு வாங்குங்கள். காற்றைப்போல் கனக்குறைவான இலஸ்ட்டோ காலணிகள் வளையுந்தன்மையுடையவை, நீடிய பாவனைக்கு உத்தரவாதம் பெற்றவை.




இலஸ்டோ போம்ட்ரெட்ஸ்

# "சகலநாடுகளுடனும் சமாதானமாக வாழ்வதே

# இந்தியாவின் கொள்கை

## இந்திய எதிர்ப்பு இயக்கத்தை சீனு கைவிட வேண்டும்

### அயூப்பின் பேச்சு எமக்கு நம்பிக்கையளிக்கிறது"

— சாஸ்திரி

புதுடில்லி, ஜூன் 12

இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை சம்பந்தமாக நேற்றிரவு இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி விடுத்த செய்தியொன்றில், புதிய மந்திரிசபை பதவிக்கு வந்தபொழுதிலும் வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றமெதுவும் இருக்காது என்று குறிப்பிட்டுள்ளார்.

சீனுபற்றி திரு. சாஸ்திரி தெரிவிக்கையில், சீனுவுடன் இந்தியா சமாதானமாக வழவே விரும்புகிறதென்றும் கொழும்பு யோசனைகளை ஏற்றுக்கொண்டு எம்முடன் பேச்சு நடத்த சீனு முன்வரவேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

**எதிர்ப்பு இயக்கம் வேண்டாம்**

இந்தியாவுக்கு எதிராக நடத்தும் பியசார இயக்கத்தையும் சீனு கைவிடவேண்டுமென்றும் திரு. சாஸ்திரி கேட்டுக்கொண்டார்.

தமது செய்தியில் திரு. லால்பகதூர் சாஸ்திரி மேலும் தெரிவித்திருப்பதாவது:

**சமாதானமே முக்கியம்**

"சகல நாடுகளுடனும் சமாதானமாக வாழ்வதே எமது கொள்கையாகும். சில்லறை பூசல்களுக்காகவும் அற்ப பிரச்னைகளுக்காகவும் நாம் நாடுகளைப் பகைத்துநிற்க விரும்பவில்லை. எல்லா நாடுகளுடனும் சமாதானமாகவே வாழ முயற்சி எடுப்போம்.

**பாகிஸ்தானும் இந்தியாவும்**

இந்தியாவும் பாகிஸ்தானும் நீண்டகாலமாக பகை நாடுகளாகவிருந்துவருவது மிகவும் வேதனை அளிக்கிறது. இந்த நிலை மாறவேண்டும். ஆசியாவில் சமாதானம் நிலைபெறுவதற்கு இந்திய—பாகிஸ்தான் நட்புறவு அவசியமானது. சமீபத்தில்பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் நிகழ்த்திய வானொலி உரை இந்திய—பாகிஸ்தான் ஒற்றுமைக்கு வழிவகுப்பதாகவிருக்கின்றது. அவரின் உரையில் விவேகமும் மதிநுட்பமும் கலந்திருக்கிறது. நல்ல தருணத்தில் நல்ல கருத்துடன் அவர் நிகழ்த்திய உரை நமக்கு உற்சாகத்தையே அளிக்கிறது.

**சோஷலிஸ ஜனநாயகம்**

இந்தியாவைப் பொறுத்த மட்டில், அண்மைக்காலத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் காரணமாக எமது பாதுகாப்பை அதிகரிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இதனுல் பொருளாதார அபிவிருத்தி பாதிக்கப்படவில்லை. பொருளாதார அபிவிருத்திக்கு போதிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. நாம் நமது குறிக்கோளை அடைய இந்தியாவில் சோஷலிஸ ஜனநாயகத்தை உருவாக்கப் பல்வேறு அரசியல் கட்சிகளும் எம்முடன் ஒத்துழைக்க முன்வரவேண்டும். எம்மை எதிர்நோக்கும் பிரச்னைகளைத் தீர்க்க நாம் ஒற்றுமைப்பட வேண்டும். ஒரே நாடு ஒரே சமுதாயம் என்ற அடிப்படையில் நாம் நமது பிரச்னைகளை அணுகவேண்டும்.

வகுப்பு வித்தியாசமோ அல்லது வேறு துவேஷ மனப்பான்மையோ இந்திய மக்களிடம் குடிகொண்டிருக்கக்கூடாது.

மண்டலசார்பற்ற கொள்கை எமக்குப் பெரும் வெற்றியை அளித்திருக்கிறது. இந்தக் கொள்கையை விட்டு நாம்அணுவளவும் பின்நிற்கப்போவதில்லை. இந்தக் கொள்கையின் அடிப்படையில் சகல நாடுகளுடனும் சமாதானமாக, ஒற்றுமையாக வாழ முயற்சியெடுப்போம்."



புதிய பிரதமர் சாஸ்திரி

## ரஷ்யமொழியில் 'அலைஓசை'

மாஸ்கோ, ஜூன் 12

'கல்கி' எழுதிய அலையோசை நாவல், ரஷ்யமொழியில் வெளியாகியுள்ளது. இந்த நாவலில் 50,000 பிரதிகள் மாஸ்கோவில் இரு தினங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்டது. கல்கியின் நாவலே ரஷ்யமொழியில் வெளியாகும் முதல் தமிழ் நாவல் என்பது குறிப்பிடத்தக்கது.

## நேரு முத்திரை

புதுடில்லி, ஜூன் 12

மக்களின் உள்ளத்திலே நேருஜி நீங்காத இடத்தைப் பிடித்துக் கொண்டதை சித்தரிக்கும் வகையில் அமைந்த நேருஜி தபால் முத்திரை இந்தியாவில் இன்று வெளியிடப்பட்டது. சாம்பல் நிறம் கொண்ட இம் முத்திரை 15 நயா பைசாவாகும். இரண்டு கோடி முத்திரைகள் அச்சிடப்பட்டிருக்கின்றன.

## நேருஜியின் அஸ்தி 23 இடங்களில் தூவப்பட்டது

புதுடில்லி, ஜூன் 12

மறைந்த நேருஜியின் அஸ்தி, இன்று இந்தியாவின் பல பகுதிகளிலுமுள்ள விளை நிலங்களில் தூவப்பட்டது.

நேருஜியின் அஸ்தியை எடுத்துச் சென்ற 23 விமானங்கள், நாட்டின் 23 பகுதிகளில் இன்று அஸ்தியைத் தூவின. நேருஜீயின் அஸ்தி, காஷ்மீர், மகாராஷ்டிரம், மேற்கு வங்காளம், டில்லி, ஜம்மு, உத்தர பிரதேசம், அஸாம், நாகாலந்து, லடாக், கன்னியாகுமரி, ராஜஸ்தான், ஹிமாலய பிரதேசம், பஞ்சாப், பீஹார், பொம்டிலா ஆகிய பகுதிகளிலுள்ள வயல்களிலும் மற்றும் நாட்டிலுள்ள ராஜ்யத் தலைநகரங்களிலும் தூவப்பட்டது. காஷ்மீரிலுள்ள விளை நிலங்களில் நேருஜியின் அஸ்தியை தூவிய விமானத்தில் நேருவின் புதல்வி திருமதி இந்திரா காந்தி இருந்தார். மகாராஷ்டிரத்தில் அஸ்தியை தூவிய விமானத்தில் நேருவின் ஒரு சகோதரி திருமதி விஜயலட்சுமி பண்டிட் இருந்தார். மேற்கு வங்காளத்தில் தூவிய விமானத்தில் மேற்கு வங்காள கவர்னர் இருந்தார்.

# பெரும் தீ விபத்து!

## 1000 குடிசைகள் நாசம்: நான்கு லட்சம் ரூபா நஷ்டம்

விஜயவாடா, ஜூன் 12

கிருஷ்ண நதிக்கரைக்குப் பக்கத்திலுள்ள கிருஷ்ணலங்காப் பகுதியில் ஆயிரம் குடிசைகள் தீ பிடித்து நாசமடைந்தன. நாலு லட்சத்துக்குப் பெறுமதியான அளவு சேதமடைந்திருப்பதாக மதிப்பிடப்படுகிறது. காலை 11 மணிக்குப் பிடித்துக்கொண்ட தீ பலத்த காற்றின் விளைவாக விரைவில் எல்லா இடங்களிலும் பற்றிக் கொண்டது. ஆறு தீயணைக்கும் இயந்திரங்களின் நாலுமணி நேர விடா முயற்சியினுல் தீ அணைக்கப்பட்டது.

தீ விபத்தின்போது பொருட்சேதம் கூடியளவு இருந்தாலும் உயிர்ச் சேதம் எதுவும் இருக்கவில்லை.

இச் சம்பவம் நடந்த சிறிது நேரத்திற்குப்பிறகு அப் பகுதி புகைமண்டலமாகக் காட்சி அளித்தது. பெண்களெல்லாம் தமது குழந்தைகளுடன் எங்கு போவது என்று தெரியாமல் தீயிலிருந்து தப்புவதற்காக ஓடிக்கொண்டிருந்தனர்.

இத் தீ விபத்து ஏற்பட்டதற்குக் காரணம் என்ன என்பது உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படாவிட்டாலும், கம்யூனிஸ்டுகளின் ஒரு கோஷ்டி தான் இதனை செய்திருக்கிறுர்கள் என்று வதந்திகள் அடிபடுகின்றன.

கம்யூனிஸ்ட் கட்சிக்கிடையில் இருக்கும் கோஷ்டிச் சண்டையே இத் தீ விபத்துக்கு காரணம் என்ற வதந்தியை மறுத்து கம்யூனிஸ்ட் கட்சிக் காரியதரிசியும் ராஜ்ய கம்யூனிஸ்ட் கமிட்டி காரியதரிசியும் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

## சைப்ரசுக்கு ஜெனரல் திம்மையா ஐ. நா. தளபதி

சென்னை, ஜூன் 11

முன்னுள் இந்திய ராணுவத் தளபதி ஜெனரல் திம்மையா, சைப்ரஸில் ஐ. நா. படைகளின் தலைமைப் பதவியை இம்மாதக் கடைசியில் ஏற்பார் என அறிவிக்கப்படுகிறது. தற்போதைய தளபதியும், இந்தியாவைச் சேர்ந்தவருமான ஜெனரல் கியாணி மாதக் கடைசியில் பதவி துறப்பதை அடுத்து, யுதாண்ட் திம்மையாவை அணுகியிருப்பதாய்க் கூறப்படுகிறது.

## சாஸ்திரியின் புதிய இல்லம்

புதுடில்லி, ஜூன் 12

இந்தியாவின் புதிய பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரியின் உத்தியோகபூர்வ இல்லமாக "ஜன்பாத்" விளங்கும் என்று நம்பப்படுகிறது. திரு. சாஸ்திரி தற்பொழுது வசிக்கும் இல்லத்துக்கு அருகில் இந்த பங்களா உள்ளது. சாஸ்திரி தற்பொழுது வசிக்கும் இல்லமும் அவரின் உத்தியோக வாசஸ்தலமாக விளங்கும்.

"ஜன்பாத்" பங்களாவில் தற்பொழுது நியுஸிலாந்து ஹைகமிஷனர் வசித்துவருகிறுர். இந்த இல்லத்திலிருந்து வெளியேறி வேறு இடம் செல்ல இவர் விருப்பம்கொண்டுள்ளார்.

காலஞ்சென்ற பிரதமர் நேருவின் இல்லம் நினைவுச் சின்னமாக விளங்கும். நேரு உபயோகித்த நாற்காலிகளும், மேசையும் தேசிய சின்னங்களாக பாதுகாக்கப்படும்.

# டோக்கியோவில் ரஸாக்

## மலேசிய உச்சி மகாநாடு திங்கட்கிழமை நடைபெறும்?

டோக்கியோ, ஜூன் 12

மலேசிய உதவிப் பிரதமர் துன் அப்துல் ரஸாக் இன்று டோக்கியோ வந்து சேர்ந்தார். மலேசியப் பிரச்னை சம்பந்தமாக நடைபெறவிருக்கும் உச்சிமகாநாட்டை எதிர்நோக்கியுள்ள கஷ்டங்களை நிவர்த்திசெய்யும் பொருட்டு பேச்சுக்கள் நடத்துவதற்காகவே அவர் இங்கு வந்துள்ளார். இவர் இந்தோனேஷிய அதிபர் சுகர்ணேவுடனும் ஜப்பான் பிரதமர் இக்கேடாவுடனும் பூர்வாங்க பேச்சுக்கள் நடத்துவார்.

மலேசியப் பிரதமர் திரு. துங்கு அப்துல் ரஹ்மான் இன்று நிருபர்களிடம் தெரிவிக்கையில்; பிலிப்பைன்ஸ் அதிபர் மக்கபகாலிடமிருந்தும் இந்தோனேஷிய அதிபர் சுகர்ணேவிடமிருந்தும் நல்ல பதில் கிடைக்கும் வரை தாம் உச்சிமகாநாட்டில் கலந்துகொள்ளப்போவதில்லையென்றும் உதவிப் பிரதமர் ரஸாக்கிடமிருந்து பதில் கிடைத்தபின்னர் தான் உச்சி மகாட்டில் கலந்துகொள்வேன் என்றும் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் கூறியுள்ளார்.

இந்தோனேஷிய அதிபர் சுகர்ணே, தற்பொழுது டோக்கியோவில் இருக்கிறுர். உத்தேச உச்சிமகாநாடு அடுத்த திங்கட்கிழமை டோக்கியோவில் நடைபெறவிருக்கிறது.

மலேசியப் பிரதமர் திரு. துங்கு அப்துல் ரஹ்மான் ஞாயிற்றுக்கிழமை டோக்கியோவுக்குப் பயணமாவார் என்று, இன்று கிடைத்த ஒரு செய்தி கூறுகிறது.

# சாஸ்திரியின் லண்டன் விஜயம்

## ஸ்ரீமாவுடன் பேச்சு நடத்துவார்

புதுடில்லி, ஜூன் 12

லண்டனில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டு பிரதம மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி ஜூலை மாதம் 4-ம் திகதி லண்டன் செல்லவிருக்கிறுர்.

லண்டனில் தங்கியிருக்கும் காலத்தில், காஷ்மீர் பிரச்னை உட்பட இந்திய-பாகிஸ்தான் பிரச்னைகள் பற்றி பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கானுடன் பூர்வாங்க பேச்சு நடத்துவார் என நம்பப்படுகிறது.

பிரச்னைகளைத் தீர்த்து சமாதானமாக வாழவிரும்பும் திரு. சாஸ்திரி, இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவையும் சந்தித்து இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர் பிரச்னை சம்பந்தமாக பேச்சுக்கள் நடத்துவார் என நம்பகரமாகத் தெரியவருகிறது.

## இறுதியாத்திரை திரைப் படம்

புதுடில்லி, ஜூன் 12

நேருஜியின் வரலாற்றுப் படம் இன்று நாடு முழுதும் காண்பிக்கப்பட்டது.

## இந்திராவின் நன்றிச் செய்திகள்

புதுடில்லி, ஜூன் 12

நேருஜியின் மரணம் குறித்து அனுதாபம் தெரிவித்த சகலருக்கும் திருமதி இந்திரா காந்தி இப்பொழுது நன்றி தெரிவித்துக்கொண்டிருக்கின்றுர்.

அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸனுக்கு அனுப்பிய செய்தியில்; அமெரிக்காவை இந்தியா அதிகமாக மதிக்கிறது" என்று திருமதி இந்திராகாந்தி குறிப்பிட்டுள்ளார்.

"இந்தியாவும் ரஷ்யாவும் இணைபிரியாத நாடுகள். இரு நாடுகளின் நல்லுறவும் விருத்தி பெற வேண்டும்" என்று சோவியத் பிரதமர் குருஷ்சேவுக்கு அனுப்பிய செய்தியில் திருமதி இந்திரா தெரிவித்துள்ளார்.

"கானுவுக்கு பிரதமர் நேரு அண்மையில் விஜயம் செய்யவிருந்தார். அதற்குள் காலன் அவரைக் கவர்ந்துவிட்டான்" என்று கான அதிபர் என்குருமாவுக்கு அனுப்பிய செய்தியில் திருமதி இந்திரா குறிப்பிட்டுள்ளார்.

## சாஸ்திரிக்கு பாராட்டு

புதுடில்லி, ஜூன் 12

இந்தியாவின் புதிய பிரதமராக திரு. சாஸ்திரி தேர்ந்தெடுக்கப்பட்டதை பாராட்டுமுகமாக, அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், நேபாளம், யுகோஸ்லேவியா, போலந்து தூதர்களும், தென் வியட்னும் வெளிவிவகார மந்திரியும் நேற்று பிரதமரின் இல்லத்துக்குச் சென்று வாழ்த்துக்கள் தெரிவித்தனர். சோவியத் பிரதமர் திரு குருஷ்சேவின் செய்தியொன்றை சோவியத் தூதர் திரு. சாஸ்திரியிடம் சமர்ப்பித்தார்.

## மணிவாக்கு

பலாத்காரப் பாதையைப் பின்பற்றுபவர்களுக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை கிடையாது.

—ஜவஹர்லால்நேரு.


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Dail, Post Box 49, Jaffna
Telegram. EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு வைகாசி 31 (13-6-64)


## பதினன்கு அம்ச திட்டம்

மூன்று மாத காலமாக ஸ்திரமற்றிருந்த அரசியல் நிலை மாறி இனி அரசாங்கம் புதிய சூழ்நிலையில் புத்துணர்ச்சியுடன் காரியங்களைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கலாம். புதிய மந்திரிசபையில் சேர்க்கப்பட்ட பழைய மந்திரி மகாநாமசமரவீரா தமக்கு பழைய பதவி கொடுக்கப்படவில்லையென்பதற்காக பதவி துறக்கலாமென்ற வதந்தி மந்திரிசபை பதவியேற்ற சில மணி நேரத்துக்குள்ளேயே பரவத்தொடங்கி விட்டது. அதற்கேற்றாற்போல் மந்திரிசபையின் முதற்கூட்டத்தில் அவர் கலந்துகொள்ளவும் இல்லை. அவர் ஒருவர் விலகுவதால் பெரும் மாற்றங்கள் எதுவும் ஏற்பட்டு விடாது.

புதிய மந்திரிசபையில் யார், யார் இருக்கிறார்களென்பதை விட நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கவும், ஐக்கியத்தை நிலைநாட்டவும் அது எவ்வாறு செயலாற்றப் போகிறது என்பதில் தான் மக்களுக்கு அதிக அக்கறை. லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த நான்கு பேர் கையைச் சுட்டுக்கொண்ட நிதிமந்திரிப்பதவியை ஏற்றுக்கொண்டுள்ள லங்காசமசமாஜக் கட்சித் தலைவர் புதிய வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதுதான் தமது முதல் வேலையென்றும் தமக்கு எல்லோரும் ஒத்துழைப்பளிக்க வேண்டுமென்றும் கூறியிருக்கிறார். திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட டாக்டர் என்.எம். பெரேராவின் பத்து அம்சத் திட்டத்துடன் மேலும் நான்கு அம்சங்கள் சேர்க்கப்பட்டு சுதந்திரக் கட்சியும் லங்கா சமசமாஜக்கட்சியும் கூட்டாக கைச்சாத்திட்டுள்ளன. இந்தப் பதினன்கு அம்சத் திட்டத்தையும் அமுல் நடத்துவதன் மூலம் நாட்டின் நெருக்கடி நிலையை நீக்கிவிடலாமென இரு தரப்பினரும் கருதுகின்றனர். இத் திட்டத்திலுள்ள சில அம்சங்களை அமுல் நடத்துவதில் சிக்கல்கள் தோன்றாமலிருக்க முடியாது. சில அம்சங்கள் இன்னும் தெளிவுபடுத்தப்படவில்லை. இந்நிலையில் இத் திட்டத்தை சரிவரச் செயல்படுத்துவதில் மந்திரிகளுக்குள் ஒற்றுமை நிலவுமா என்பதும் டாக்டர் பெரேரா விரும்பும் ஒத்துழைப்பும் ஆதரவும் மந்திரிசபைக்குள்ளேயே கிடைக்குமாவென்பதும் பொறுத்திருந்து பார்க்க வேண்டியவை. கூட்டு அரசாங்கத்தை எதிர்த்த இடதுசாரி சக்திகளும் டாக்டர் பேரேராகோரும் உதவியையும் ஒத்துழைப்பையும் அளிக்குமாவென்பது புதிய வரவு-செலவுத் திட்டத்தைப் பொறுத்துள்ளதென்று கூறமுடியாது. சமசமாஜக்கட்சியிலிருந்து பிரிந்து புதிய 'புரட்சி' கட்சி அமைத்துள்ளவர்கள், "தொழிலாள வர்க்கத்துக்கு துரோகம் செய்துவிட்டனர்" என்று முதற் குரல் எழுப்பியுள்ளனர்.

சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய முறையில் உத்தியோக மொழிச்சட்டத்தையும், நியாயமான அளவு தமிழ் மொழி உபயோக (விசேஷ ஷரத்து) சட்டத்தையும் அமுல் நடத்துவதற்கானவகையில் நிருவாகச் சட்டவிதிகளைக் கொண்டுவருவதென்பது பதினன்கு அம்சங்களில் ஒன்று. உத்தியோக மொழிச் சட்டத்தைக் கொண்டு வந்ததன்மூலம் நாட்டின் ஐக்கியம் குலைந்ததையும் தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்பினால் நாட்டில் நிர்வாகம் சீராக நடைபெறமுடியாமற் போனதையும் உணர்ந்த காலஞ்சென்ற பிரதமர் நியாயமான அளவு தமிழ் மொழி உபயோக மசோதாவைக் கொண்டுவந்து சட்டமாக்கினர். என்றாலும் அதை அமுல்நடத்துவதற்கான சட்ட விதிகளைக் கொண்டுவருமுன் அவர் மறைந்துவிட்டார். அவருக்குப்பின் ஆட்சிபீடத்திலமர்ந்த, அவரதுகொள்கையைப் பின்பற்றுவதாக் கூறிக்கொண்ட அரசாங்கம் சிங்களம் மட்டும் சட்டத்தைத்தான் தீவிரமாக அமுல்நடத்தியதேதவிர நியாயமான அளவு தமிழ் மொழி உபயோகச்சட்டத்தைப் பற்றிச் சிறிதும்கூட அக்கறை கொள்ளவில்லை. பதினான்கு அம்சத்திட்டத்தை அமுல் நடத்த ஒப்புக்கொண்டுள்ள புதிய மந்திரிசபையிலும் பழைய மந்திரிகள் பன்னிருவரும் உள்ளனர் நியாயமான தமிழ் மொழி உபயோகத்தைப்பற்றி முன்னர் கவலைப்படாதவர்கள், புதிதாகச் சேர்ந்த மூன்று மந்திரிகளின்மூலம் இனி அக்கறைகொள்வார்களா? அல்லது பதினான்கு அம்சத் திட்டத்தில் மொழி அம்சம் ஒரு அம்சமாகவே இருந்துவிடுமா?

புதிய மந்திரிசபை அமைக்கப்பட்டுவிட்டதால் மட்டும் பிரச்னைகள் தீர்ந்துவிடாது. இந்த நாட்டிலுள்ள சிறுபான்மையினர் பிரச்னைகள் முதலில் தீரவேண்டும். இது டாக்டர் பெரேராவுக்கு நன்கு தெரியும். அவரது முயற்சி வெற்றிபெறவேண்டுமென்பதே நமது ஆவல்.

இன்று குருபூஜை

# தெய்வச் சேக்கிழார் திருமுறை அழகு

தொண்டர் புராணம், பெரிய புராணம், பன்னிரண்டாந் திருமுறை என வழங்கப்படும் தெய்வக் காவியத் திருமுறை, 'உலகெலாம்' அம்பலத்தாடி என்று அடியெடுத்துக் கொடுக்க, தெய்வச் சேக்கிழாரரால் சிதம்பரத்தின்கண்பாடி அருளப்பட்டது. நாலாயிரத்திருநூற்றெண்பத்தாறு திருப்பாட்டுக்களைக் கொண்டது. 'தெய்வச் சேக்கிழார் திருமுறை அழகு' என்ற தொடரை தெய்வச்சேக்கிழார், திருமுறை, அழகு என முப்பிரிவுகளாகப் பிரித்து ஆராய்வது பயனுடையதாகும்.

### தெய்வச் சேக்கிழார்

சேக்கிழார் பெருமானைதெய்வச் சேக்கிழார் என்பது பொருந்துமா என்பதுகேள்வி. ஆம் பொருந்துமென்பது விடை. 'உலகெலாம்' எனத் திருவருட் கூர்ந்த சிவபரஞ்சுடருக்கு மந்திரம் தூலசரீரமும், ஆன்மாக்குக்கும சரீரமும் சக்தி அதிசூக்கும சரீரமுமென ஆகமங்கள் கூறுகின்றன. அச்சிவபரஞ்சுடரான நடராஜமூர்த்தி பஞ்சாக்கரத் திருவுருவினனாக விளங்குகிறான். உண்மை விளக்கத்தில் அவன் தூலபஞ்சாக்கர வடிவினனாக விளங்கும் முறை,

"ஆடும் படிகேள்நல்
லம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியி
லேநகரம்-கூடும்
மகரம் உதரம்
வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப்பார்"

என்பதனாலும் சூக்கும பஞ்சாக்கரனாக விளங்கும் முறை,

"சேர்க்குந் துடிசிகரம்
சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம்
அபயகரம்-பார்க்கிலிறைக்
கங்கி நகரம்
அடிக்கீழ் முயலகனர்
தங்கும் மகரமதுதான்" என்

பதனாலும் அறிக.

இவ்வாறு பஞ்சாக்கரத் திருவுருவினனாகிய அம்பலத்தாடியால் எடுத்தருளப்பெற்ற திருவாக்கும் 'உலகெலாம்' எனும் ஐந்தெழுத்தாலாய பெருவாக்காம். அகரப் பிரணவத்தையே ஆதியாகக் கொண்டு நிலவுவதாய 'அம்பலம்' என்னும் மொழியும் ஐந்தெழுத்தானாய மந்திர சொரூபப் பொருளாற விளங்கி நிற்பதாம். அவ்வருள் நாதவொலியைப் பெற்று திருவருட் காவியத்தைக் கல்லுமுருகக் காண்போர் கனிந்துருக அருளிய அண்ணலார் திருநாமமும் சேக்கிழார் என்னும்ஐந்தெழுத்தே. எனவே சிதாகாசப் பெருவெளியாய்—அம்பலத்தாடியாய்-நிற்கும் இறைவனும், அப்பரவெளியினூடெழுந்த உலகெலாம் என்னும் அருணதவொலியும் அதுகொண்டு இவ்வருட்காவியத்தை இயற்றிய ஆசிரியப் பெருந்தகையின் திருவுருவமும்பஞ்சாக்கரத்திருமேனியே. ஆகலின் சேக்கிழார் பெருமானை, தெய்வச் சேக்கிழார் என்றும் அவர் காவியத்தைத் திருவருட்காவியமென்றுங் கூறுதல் பொருந்தும்.

## வி. சங்கரப்பிள்ளை

### திருமுறை

திருமுறையென்பதற்கு தெய்வநெறி என்று பொருள் கூறலாம். தெய்வநெறி என்றது சைவநெறியை. பன்னிரு திருமுறைகளும் சைவநெறியைக் கூறுவனவாம். அவை திருஞானசம்பந்தநாயனார் அருளிய தேவாரங்கள் முதலாகப் பெரியபுராணம் ஈறாகப் பன்னிரண்டாகப் பெரியோர்களால் வகுக்கப்பட்டிருக்கின்றன. அவையே திருமுறையெனப்படுவது உயர்ந்தோர் மரபு. இந்தப் பன்னிரண்டினையும் அருளிய ஆசிரியன்மார்கள் திருஞானசம்பந்தநாயனார் முதல் சேக்கிழார்நாயனார்வரை இருபத்தெழுவராவர். அவருள்ளே திருவாலவாயுடைய பெருமானும் ஒருவர். ஏனைய திருமுறைப் பகுதிகளை அருளியவர்களாகிய இருபத்தறுவரும் தாமாக அவற்றைச் செய்தவரல்லர். சிவபரஞ்சுடரே அவ்வாளுடைய பிள்ளையார் முதல் சேக்கிழார் ஈறாகவுள்ள இருபத்தறுவரையும் அதிட்டித்து நின்று இத்திருமுறைகளைத் தோற்றுவித்தார். ஆதலால் இத்திருமுறைகள் இறைவனால் இயற்றப்பட்டவையேயாம் என்க. இது 'எனதுரை தனதுரையாக நீறணிந்தேறுகந்தேறியவிமலன்' எனக் காழிப் பெருமான் திருவாய் மலர்ந்தவாற்றால் அறிக.

சேக்கிழார் திருமுறையாகிய பெரியபுராணம் 'உலகு' என்ற மங்கல மொழியை முதல், இடை, கடைகளிற் கொண்டு விளங்குகின்றது. இவ்வுலகு என்னும் மங்கலமொழியையே முதற்கண், கடைச்சங்கத்துத் தலைமைப் புலவராய நக்கீர தேவரும் 'உலகமுவப்ப' எனத் திருமுருகாற்றுப்படைத் தெய்வ நூலிலும், கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பரும், கவிச்சுவைக் காவியமாகிய இராமாயண காவியத்தின் முதற்கண் 'உலகம் யாவையும்' எனவும் மங்கலமாக அமைத்துக்கொண்டமை தெரியப்படுகின்றது. அன்றியும் சமய நூல் முறைக்கண் உகரமென்பது சிவசக்தியின் உயிர் அக்கரங்களுள் முதற்கண் நிலவும் அருமை அந்நூல் வாயிலாலும் முதற்பெருங் கடவுள் திருவருள் வலத்தானே இது தோன்றிக் கிடக்கும் என்பதும் உணர்க. அன்றியும் உகரம் முத்தொழிலின் இடைப்பட்டுத் திதித்தொழிலை உணர்த்துமாறும் உணர்க. அழகிய சிற்றம்பலமுடையவன் 'ஆதிசத்தியோடு சேரின் எப்பொருளும் வல்லதாம்' என்னும் பிரமாணத்துக்கேற்ப சிவசக்தியோடு கூடியே அருள் மொழிவள்ளலாரை அதிட்டித்து நின்று இவ்வருட்காவியத்தை அருளினரென்னும் சைவசித்தாந்த நுண்பொருள் இதனாற் போந்தவாறுங் காண்க. எனவே இத் திருமுறை முதற் சைவ நெறியாகிய சைவசித்தாந்த நெறிக்கு வழிகாட்டுவதென்பது புலனாகின்றது. சித்தாந்த சாஸ்திரங்களாகிய சிவஞான போதம், சிவஞான சித்தியார் என்பன அணைந்தோர் (சீவன் முத்தர்) தன்மையைப் பன்னிரண்டாம் சூத்திரத்திற் கூறுவதுபோல, அணைந்தோர்களாகிய அடியார்கள் பெருமையைக் கூறும் பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாக அமைந்தமையும் சிறப்புடைத்து.

### அழகு

அழகு என்னும் மொழியின் முதல் 'அ'கரம் எவ்வெழுத்துக்கும் ஆதியாயிருத்தலோடு அநாதியான சிவத்தையுங் குறிக்கின்றது. சிவம் சைவத்தோடு சம்பந்தமுடையது. 'ழ'கரம் தமிழ் மொழிக்குச் சிறப்பெழுத்தாய் விளங்குகின்றது. 'கு'வென்னும் ஓரெழுத்து ஒரு மொழி உலகமெனப் பொருள் தருகிறது. 'உலகம் என்பது உயர்ந்தோர் மேற்று' எனவே, சைவமும் தமிழும் பின்னிப் பிணைந்து தழைத்த இடத்து உயர்ந்தோர் உண்டென்பதும் அங்கு அழகு தோன்றும் என்பதும் உய்த்து உணரப்படுகின்றன. சேக்கிழார் திருமுறை சைவமும் தமிழும் தழைத்து உயர்ந்த உலகோராகிய முதல் சைவநெறி வாழ்க்கையையுடைய தொண்டரது வரலாற்றைக் கூறும் பெரியபுராணம் என்னும் அழகுடைத் திருவருட் காவியமாய் மிளிருகின்றது.

இவ்வருட் காவியத்தின் அழகை விளக்குவதற்கு எத்தனையோ திருப்பாட்டுகள் உள. பானை சோறனைத்தும் பதம்பார்த்திடப் பருக்கையொன்று போதுமென்ற காரணத்தால் 'அருட்பெருகு தனிக்கடல்' என்ற தொடக்கத்தையுடைய திருப்பாட்டை மாத்திரம் எடுத்துக்கொண்டு விளக்குவேன்

திருஞானசம்பந்தரும், அப்பரும் சீர்காழியில் ஒருவரையொருவர் கண்டு அளவளாவி இறைவன் கோயிலைச் சேர்ந்த செய்தியைக் கூறும் பெரியபுராணத் திருப்பாட்டு இது. இதனுட் கூறிய அடைமொழிகள் இருவருக்கும் பொருந்துவனவாகும். "அருட்பெருகு தனிக்கடல்" என்பது திருஞானசம்பந்தரைக் குறிக்கும். இறைவன் அம்மையப்பராய் எழுந்தருளி வரப்பெற்று மூன்றும வயதிலே ஞானப்பால் அளிக்கப்பெற்றவராதலால் அவர் இறைவன் திருவருள் பெருகுகின்ற தனிக்கடலாவர். உலகினர் யாவரிடத்தும் தாய் போன்ற அன்புடையவராய் அவர்கள் பொருட்டு இறைவனிடம் பெரிதும் பேசும் மனப்பான்மை அப்பர்பெருமானுக்கு உண்டென்பது அவர் திருமுறைகளில் புலனாகலின், ஆசிரியர் சேக்கிழார் அவரை "அன்பு செறிகடல்" என்றார். சம்பந்தப்பெருமானை அருட்கடல் என்றும் அப்பர்

(5-ம் பக்கம் பார்க்க)

## சைவசமய தொண்டர்க்கு பட்டமளிப்பு

மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனத்தில் சென்ற மாதம் 28-ம் திகதி திருஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் குருபூசைமகோற்சவம் குருமகாசந்நிதானம் ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது.

சைவத்திற்கும் தமிழுக்கும் நற்பணி புரிபவர்களில் சிலரை ஆண்டுதோறும் ஆதீனம் கௌரவிப்பது வழக்கம் இவ்வாண்டில் கீழ்க்கண்ட (இலங்கையில் இருப்பவர்கள்) ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் பட்டங்கள் வழங்கியுள்ளார். இலங்கையில் உள்ளவர்களில் ஸ்ரீமதி சிவானந்தா தம்பையா 'சிவநெறிச் செம்மணி'. கொழும்பு தம்பையா முதலியார் சத்திர அதிபரும் பொது சைவப்பணித் தொண்டரும்.

ஸ்ரீ அருணசலம் விஸ்வநாதன் 'சைவசித்தாந்தசரபம்'. விவேகானந்தசபை சைவபரிபாலனசபைப் பிரதம ஆட்சியாளராகக் கடமைசெய்தவர். இளைப்பாறிய வடமாகாண உதவி அரசாங்க அதிபர்.

வித்துவான் இ. சி. சோதிநாதன் கொழும்பு—'சிந்தாந்தச் செம்மணி'.

திரு. ஆ. கந்தையா 'சிவநெறித் தொண்டர்' கொழும்பு இந்துக்கல்லூரி ஆசிரியர்.பொதுச் சைவத்தொண்டர்.

சைவப்புலவர் தேசிகமணி கா. அருணசலம் மட்டக்களப்பு 'சைவமெய்ப் போதகர்'.

ஸ்ரீ எஸ். சரவணமுத்து கொழும்பு. 'சிவநெறிச்செம்மல்" விவேகானந்தசபை, கதிர்காமத் தொண்டர்சபை ஆட்சிக் குழுவினர், ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணி இயக்கத்தில் முன்நின்றுஉழைத்து வருபவர்.

ஸ்ரீ. பி. ஸ்ரீஸ்கந்தராசா—"சைவ சிகாமணி" சுப்பிரீம் கோர்ட் நீதியரசரும் பிரபல சைவத் தொண்டரும் கொழும்பு.

ஸ்ரீ எம். வைரவப்பிள்ளை "செந்தமிழ்மாமணி" கொழும்புத் தமிழ்ச்சங்கத் தலைவர். விவேகானந்தசபை, திருக்கேதீஸ்வர ஆலயச்சபை அங்கத்தவர்.

டாக்டர் டி. நல்லைநாதன் "சிவபக்தசிகாமணி" நல்லூர் சட்டநாதர் சிவன்கோவில் தர்மகர்த்தா, விவேகானந்த சபை, தமிழ்ச்சங்கம் ஆதிய சைவசமயச் சங்கங்களில் உப தலைவர்.

திரு. டி. முத்துச்சாமிப்பிள்ளை-"சிவநெறிக் காவலர்" வழக்கறிஞர், சைவபரிபாலன சபைத் தலைவர், யாழ்ப்பாணம்,

திரு. எம். மயில்வாகனம் யாழ்ப்பாணம் "சித்தாந்த சிரோன்மணி" யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையின் சமயப்பிரசாரகர்.

திரு. பொன். கருணாகரர், தெல்லிப்பளை, யாழ்ப்பாணம்- "மதுரை ஆதீனவித்துவான்" பொதுச் சைவத்தொண்டர்.

யாழ்ப்பாணத்தில்

# ஏற்பு வலிக்கு நால்வர் பலி

யாழ்ப்பாணம், சனி

ஏற்பு வலி காரணமாக நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் ஒரு குழந்தை உட்பட நாலு பேர் மரணமானர்கள்.

யாழ்ப்பாணம் மாநகரசபையில் கடமையாற்றும் 51 வயதுள்ள கிறகோரி அந்தோனிப்பிள்ளை நேற்று முன்தினம் ஏற்புவலியால் காலமானர். மரண விசாரணையின் போது அவரின் சகோதரரான திரு. கிறிகோரி ஜோன் சாட்சியமளிக்கையில், ஒரு மாத காலத்துக்கு முன்னர் தமது சகோதரருக்கு முள்ளுக்குத்தியதென்றும் வாய் திறக்க முடியாத நிலையில் சென்ற மாதம் 31-ம் திகதி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார் என்றும் கூறினர். மரண விசாரணையை திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் நடத்தினர். ஏற்பு வலியால் மரணம் சம்பவித்ததென்று டாக்டர் பி. சண்முகராஜா தீர்ப்பளித்தார்.

கொட்டடியைச் சேர்ந்த சுப்பன் கந்தசாமியின் பத்துநாள் குழந்தை நேற்று முன்தினம் ஏற்பு வலியால் மரணமானது. டாக்டர் திருமதி ஆனந்தராசா ஏற்பு வலியால் மரணம் ஏற்பட்டதென்று தீர்ப்பளித்தார். மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் விசாரணையை நடத்தினர்.

கங்கேசன்துறை புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த 56 வயதுள்ள ஞானமணி, கடந்த மாதம் காலில் ஈர்க்கு குத்தியதன் விளைவாக இம்மாதம் 6-ம் திகதி வாய் திறக்க முடியாத நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு நேற்று முன்தினம் மரணமானர். சூராவத்தையைச் சேர்ந்த கு.கணேசலிங்கம் என்பவரும் காலில் ஈர்க்கு குத்தியதன் விளைவாக இம் மாதம் 6-ம் திகதி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு நேற்று முன்தினம் மரணமானர். மரணவிசாரணைகளை திரு. எஸ். கனகரத்தினம் நடத்தினர்.

# "பார்லிமெண்டை கலைத்து தேர்தலை நடத்துக"

## ஜே. ஆர். அறிவிப்பு

கந்தானை, வெள்ளி

"சென்ற பொதுத் தேர்தலின்போது இடதுசாரிகளுக்கு எதிராக வாக்களித்த இருபத்திரண்டு லட்சம் மக்களுக்கு அதிர்ச்சியையும் திகைப்பையும் உண்டுபண்ணக்கூடிய ஒன்றுதான். கூட்டரசாங்கம் பாராளுமன்றத்தை உடனடியாக கலைத்துவிட்டு புதியதோர் அரசாங்கத்தைத் தெரியும் பொறுப்பை மக்களிடம் விடவேண்டும்."

இவ்வாறு கொழும்பு தெற்கு எம். பி. திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன சீதுவையில் நடைபெற்ற யு. என். பி.யின் பிரசாரக் கூட்டமொன்றில் பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: "திரு. பிலிப் குணவர்த்தன போன்றவர்கள் இலங்கைத் தேசியக் கொடியிலுள்ள சின்னமான சிங்கத்தை மாற்றி அரிவாளையும் சுத்தியையும் சின்னமாகப் பதிக்க விரும்புகிறர்கள். என். எம். பெரேரா போன்றவர்கள் கூட்டரசாங்கத்தை வைத்துக் கொண்டு சர்வாதிகார ஆட்சியை நிலைநிறுத்தப் பார்க்கிறர்கள்.

"இடதுசாரிக் கட்சிகளான கம்யூனிஸ்ட், எம். ஈ. பி., லங்காசமசமாஜக்கட்சி ஆகியவற்றுக்குச் சொந்தமாக எதுவித கொள்கைகளும் கிடையாது. அவர்கள் பீக்கிங்கும் ரஷ்யாவும் சொல்பவைகளுக்குத் தலைவணங்கிக் கொண்டிருக்கின்றன."

—

## 4-வது வருடாந்த விழா

யாழ்ப்பாணம், சனி

அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழ் தராதரப் பத்திர ஆசிரிய சங்கத்தின் நான்காவது வருடாந்த மகாநாடும் நிறைவுப் பொதுக் கூட்டமும் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகும்.

யாழ்ப்பாணம் சிங்கள மகா வித்தியாலயத்தில் திரு. வ. சின்னத்தம்பி தலைமையில் நடைபெறும். இம் மகாநாட்டில், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் திரு. வே. சி. கந்தரலிங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

## தெய்வச் சேக்கிழார்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பெருமானை அன்புக்கடல் என்றும் பெரியபுராண ஆசிரியர் கூறியதற்கு மற்றுமோர் காரணமும் உண்டு 'அருளென்னும் அன்பீன் குழவி' என்றார் திருவள்ளுவர். அன்பினை அருளுக்குத் தாயாகவும் கூறலாம்; தந்தையாகவும் கூறலாம். சம்பந்தர் திருநாவுக்கரசரை 'அப்ப'ரென்றும், அப்பர் ஓரிடத்தில் சம்பந்தரை 'பிள்ளாய்' என்றும் விளித்தமை அப்பரே அன்பென்றும் ஆளுடையபிள்ளையாரை அருளென்றும் உருவகித்துக் கூறியது திருக்குறள் கருத்துக்குப் பொருத்தமாவது காண்க.

இங்கு கூறியவற்றால் சேக்கிழார் பெருமான் இறைவனருள் பெற்ற தெய்வமென்பதும், அவர் இயற்றியருளிய திருவருட் காவியமாகிய பெரிய புராணம் திருமுறை வகுப்பைச் சேர்ந்ததென்பதும், சைவமும் தமிழும் தழைத்துத் தொண்டர் வரலாற்றைக்கூறி அழகுற நின்று முதல் சைவ நெறியாகிய சைவசித்தாந்த நெறிக்கு வழிகாட்டுவதென்பதும் அறியக்கிடக்கின்றன.

—

## பெண்ணின் சடலத்தை கண்டுபிடித்தனர்

காலி, வெள்ளி

65 வயதுள்ள பெண்ணின் சடலம் பழுதடைந்த நிலையில் தங்கெதராவிலுள்ள வீடொன்றில் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இறந்த பெண்ணின் இரு கால்களும், கைகளும் கயிற்றினல் கட்டப்பட்டிருந்தது.

காணுஞ்சென்ற பெண்ணின் பக்கத்து வீட்டுக்காரர் கொடுத்த தகவலின் பேரிலேயே பொலிஸார் இச்சடலத்தைக் கண்டுபிடித்தனர்.

—

## யாத்திரிகர்களுக்கு அன்னதானம்

மட்டக்களப்பு, வெள்ளி

மட்டக்களப்பு தெய்வ நெறிக் கழகத்தினர், கடந்த வருடத்தைப்போன்று இம் முறையும் கதிர்காம யாத்திரிகர்களுக்கு அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்துள்ளனர்.

## சுகாதாரவார போட்டி முடிவுகள்

மட்டக்களப்பு, வெள்ளி

மட்டக்களப்பு சுகாதார வார இயக்கக் குழுவினரால் ஒழுங்குசெய்யப்பட்ட, தேகபுஷ்டியான குழந்தைகள் தெரிவு, தேகாரோக்கியமான தாய்மார் தெரிவுப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

**குழந்தைகள்**

புளியந்தீவு: 1. ஜோசப்பின் பெனடிக்ற், 2. நாகேஸ்வரன் முத்துலிங்கம்.

கோட்டமுனை: 1. தேவராசா பெனடிக்ற், 2. நேசராசா ராசரத்தினம்.

**தாய்மார்**

புளியந்தீவு: 1. முத்துலிங்கம் மாரிமுத்து (வயது 36), 2. முத்தையா செல்லம்மா (வயது 35).

கோட்டமுனை: 1. செல்வராசா முத்தம்மா (வயது 30) இராஜதுரை இராஜேஸ்வரி வயது 23).

—

## ரயில் பாதுகாப்பு சேவை

யாழ்ப்பாணம், சனி

பளையிலிருந்து காங்கேசன் துறை வரையும் புதிய புகையிரத பாதுகாப்பு சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புகையிரதங்களில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதிலும் இலாகாவுக்குச் சொந்தமான பொருட்களைப் பாதுகாப்பதிலும் உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர்,

உள்ளூர் புகையிரதங்களில் "கம்பாட்மெண்ட்"களிலுள்ள ஆசனங்களிலிருந்து "குஷன்" வெட்டி எடுக்கப்படுவதை தடுக்கவே முக்கியமாக இச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்கள் அநேகர் இவ்விதமான காரியங்களில் ஈடுபட்டுவருவதாகவும் இனிமேல் அவ்விதம் செய்வது கண்டுபிடிக்கப்பட்டால் தகுந்த தண்டனை அளிக்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. சில வர்த்தகர்கள் "குஷன்" களவாடும் காரியத்துக்கு தங்கள் நன்மை கருதி ஊக்கமளித்துவருவதாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் புகையிரதம் ஒன்றில் உள்ள 60 ஆசனங்களிலிருந்து "குஷன்" துண்டுகள் வெட்டி எடுக்கப்பட்டுள்ளன.

# "வேற்றுமையில் ஒற்றுமைகாண பரந்த அறிவு தேவை"

## பிரிட்டிஷ் கவுன்ஸில் தலைவர் கருத்து

மட்டக்களப்பு, வெள்ளி

"உலகிலுள்ள எண்ணிறந்த வேற்றுமைகளுக்குள்ளே ஒரு ஒற்றுமை காண்பதற்கு பரந்த அறிவு அவசியம். அதை எங்களுக்கு பெற்றுத் தருவதற்கே எங்கள் நூல் நிலையங்கள் பயன்படவேண்டும். அங்கு வாசிக்கும் பழக்கத்தை நாங்கள் நன்ருக வளர்த்துக் கொள்ளவேண்டும்".

இவ்வாறு பிரிட்டிஷ் கவுன்சில் தலைவர் திரு. ஆர். கே. பிறேடி நூல்நிலைய வாரத்தை யொட்டி மட்டக்களப்பு ஆசிரிய சங்கத்தின் ஆதரவில் நடந்த விழாவில் கூறினர். இவ்விழா மட்டக்களப்பு ஆசிரியசங்கத் தலைவர் திரு. கே. அருணசலம் தலைமையில் மெதடிஸ்த மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

திரு. பிறேடி மேலும் கூறியதாவது:

"பெரும் புலவர்களின் இலக்கியங்களைக் கருத்தூன்றிக் கற்பதால் நாங்கள் அவர்களது உள்ளத்தின் ஆழத்திலிருக்கும் இன்பத்தையும், சமாதானத்தையும் பங்குகொள்ள முடிகிறது. ஒரு எழுத்தாளன் உணர்வது முழுவதையும் சொல்ல முடிவதில்லை. தனது மட்டற்ற உணர்ச்சியின் ஒரு பகுதியையே அவன் சொற்களால் வெளியிட முடிகிறது. அப்படித் தான் உணர்வதை வெளியிடுவதற்குத் திண்டாடும் எழுத்தாசிரியன், தான் எழுதுவது மற்றவர்களுக்கு விளங்குமா, அதை அவர்கள் சுவைப்பார்களா என்று சிந்திப்பதில்லை. மற்றவரின் விருப்பத்திற்கும் ஆற்றலுக்கும் அமைய எழுதுவதானல் அவன் ஒரு உண்மைப் புலவனுகமாட்டான். தான் உணர்வதை அப்படியே கூறுவதுடன் எழுத்தாளனின் வேலை முடிகிறது. அதைப் படித்து விளங்குத்து எங்கள் கடமை"

## கதம்ப விழா

கொடிகாமம், வெள்ளி

கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலய மண்டபத்தில் மக்கள் சுகாதார வாரத்தை யொட்டி பாடசாலைகளின் கதம்ப விழா சென்ற வியாழக் கிழமை மாலை சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினத்தின் ஆதரவுடன் இளைப்பாறிய தபால் நிலைய அதிபர் திரு. பேரம்பலம் செல்லையாவின் தலைமையில் நடைபெற்றது.

# "ஒற்றுமை பற்றி பேசுகிறர்கள் உருவாக்குவோர் இல்லை"

## கோப்பாய் சுகாதாரவார விழாவில் சேர் கந்தையா

நலலூர், வெள்ளி

"ஒற்றுமையென்பதனைப் பற்றி எல்லோரும் பேசுகிறர்கள். ஆனல் அந்த ஒற்றுமையை உண்டாக்கி அதனை வளர்ப்பதற்கு முயல்வார் யாருமில்லை" என்று சேர் கந்தையா வைத்தியநாதன் கோப்பாய் சுகாதாரவார விழாவின் ஐந்தாம் நாள் நிகழ்ச்சிகளை இன்று காலை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

அரசாங்க சேவையாளர்கள், சமூகத் தொண்டர்கள் ஒன்றுபட்டு ஒற்றுமைக்கான வழிகளைக் கையாளுவதற்குத் தகுந்த முயற்சிகளை இத்தகைய விழாக்கள் மூலம் ஏற்படுத்தலாம். போதிக்கப்படும் பாடங்களினல் ஆரோக்கியமோ உடல் நலமோ சமூகத் தொண்டோ பிறந்துவிட முடியாது. சமூகத் தொண்டுகளைச் செய்வதற்குப் பயிற்சி வேண்டும். எதனையும் சாதனை மூலம் கொண்டுவருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பனம் பொருள்களினல் உபயோகம் உண்டு என்பதனை நாமறியும்காலம் வெகுதூரத்திலில்லை. இப்போது பனம் பழங்களை தாம் உபயோகப்படுத்தாமல் மாடுகளுக்கு விட்டுவிடுகிறர்கள். விஞ்ஞானிகள் பனம் பொருளின் உபயோகத்தைச் சொன்ன பின்னரே நாம் அதனை உபயோகத்துக்குக் கொண்டுவருவோம்.

திரு. ராஜரத்தினம் வரவேற்புரை நிகழ்த்துகையில், சேர் கந்தையா வைத்தியநாதன் அரசியலிலிருந்து விலகியது தமிழரின் தவக்குறைவென்றும் ஆனலும் சமூக சமயத் தொண்டின்மூலம் இக்குறையை அவர் நிவர்த்தி செய்வது ஆறுதலளிக்கிறதென்றும் கூறினர்.

## ஷேக் அப்துல்லா

ஸ்ரீநகர், ஜூன் 12

காஷ்மீர் மக்கள் நேருஜியை என்றும் மறக்கமாட்டார்கள் என்று திரு. ஷேக்அப்துல்லா தெரிவித்துள்ளார்.

இங்கு நேற்று மாலை நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் அவர் உரை நிகழ்த்தினர். இந்தியா - பாகிஸ்தான் நட்புறவை வளர்ப்பதே மறைந்த நேருஜிக்கு நாம் செலுத்தும் கைமாறு என்றும் திரு. ஷேக்அப்துல்லா குறிப்பிட்டார்.

—

## கல்லடி உட்போடை கி.ச. தேர்தல் முடிவுகள்

மட்டக்களப்பு, வெள்ளி

மட்டக்களப்பு கல்லடி உப்போடை கி. ச. தேர்தலில் பின்வருவோர் வெற்றியீட்டியுள்ளனர். திரு. என். நாகேந்திரம், எஸ். தர்மசேன, ஜி.பாஸ்கரன், எஸ். சின்னத்துரை, கே. கதிர்காமத்தம்பி, எஸ். கிருஷ்ணபிள்ளை, க. குழந்தைவடிவேல், எஸ். ஆசைப்பிள்ளை எஸ். இராஜதுரை, ஈ. பூசுப்பெப்பை.

## நேரடி தபால் விநியோகம்

கொழும்பு, வெள்ளி

ஒரு அமைச்சிலிருந்து மற்ற அமைச்சுக்கோ அல்லது கொழும்பிலுள்ள ஒரு இலாகாவிலிருந்து மற்ற இலாகாவிற்கோ இனிமேல் எல்லா கடிதங்களும் அந்தந்த இலாகா பியோன்மூலமே கொடுக்கப்பட வேண்டும் என்று நேற்று நடைபெற்ற நிரந்தரக் காரியதரிசிகளின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இக்கூட்டத்திற்கு திறைசேரிக் காரியதரிசி திரு. எச். ஜே. சமரக்கொடி தலைமை வகித்தார்.

இந்த முடிவினல் தபால் கந்தோரில் வேலைகள் குறைக்கப்படுவதோடு தபால் பகுதி வேலைகள் தாமதிக்கப்படாதென்றும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

## ரூ. 400 திருட்டு

காங்கேசன்துறை, வெள்ளி

காங்கேசன்துறையில் காங்கேசன்துறை பொலிஸார் தங்கும் விடுதிகளுக்கு முன்னுல் உள்ள காங்கேசனஸ்ரோரில் ரூபா 400/- காசு நோட்டும் சில்லறையுமாக திருடப்பட்டுள்ளது.

மேற்படி திருட்டுச் சம்பந்தமாக எவரும் கைது செய்யப்படவில்லை,

கடையை பொலிஸார்காவல் புரிந்து வருகின்றனர்.

காங்கேசன்துறை பொலிஸைச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர் திரு. ஆட்டிக்கலை புலன் விசாரணை நடத்தி வருகிறர்.

## புதிய தூதர்

புதுடில்லி, ஜூன் 12

இந்தியாவுக்கான புதிய ஐக்கிய அரபுக் குடியரசு தூதர் இன்று காலை தமது நியமனப்பத்திரங்களை இந்திய ஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனிடம் சமர்ப்பித்தார்.

அப்பொழுது அவர் பேசுகையில், இந்தியாவுக்கும் ஐக்கிய அரபுக்குடியரசுக்குமிடையில் பல வருட காலமாக உறவு இருந்துவருகிறதென்றும் நேரு காலமான செய்தி கேட்டு அதிர்ச்சியுற்ற தமது நாட்டு மக்களின் நினைவில் நேரு என்றும் நிலைத்திருப்பார் என்றும் கூறினர்

டாக்டர் ராதாகிருஷ்ணன் பேசுகையில், இரு நாடுகளும் ஒரே காலத்தில் தான் சுதந்திரமடைந்தனவென்றும் இரு நாடுகளின் உறவுகளும் மேலும் விருத்தி பெறும் என்றும் கூறினர்.

# அதிக செலவு ஏன்?

## உத்தரவாதமுள்ள சிறந்த தரமான புண்ணுக்கை

## ஜா எல மில்லும் - மாக்கஸ் மில்லும்

அளிக்கும்பொழுது

- ★ வைட்டமின்சத்து நிறைந்த எளிதில் ஜீரணிக்கக்கூடிய மிருக உணவு.
- ★ பல வாரங்களாகச் சேர்த்து வைத்தாலும் புதிதுபோல் காணப்படக் கூடியது.
- ★ விரைவாக கரைதலால் நேரத்தையும், கூலியையும் ஆதாயப்படுத்து கின்றது.
- ★ குறைந்த செலவில் நிறைந்த பலன்.

ஒரு தொன்னின் விலை ரூபா **165-00**

## கீழ்க்காணும் இடங்களில் இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்

ஏ. ஆர். பி. புலமடன் செட்டியார் அன் சன்ஸ், 196, 4-ம் குறுக்குத்தெரு, புறக்கோட்டை.
எம். முத்தையாபிள்ளை, இல. 47, 5-ம் குறுக்குத்தெரு, புறக்கோட்டை.
ஆர். எம். திருவடி செட்டியார் அன் கோ, 122, 4-ம் குறுக்குத்தெரு, புறக்கோட்டை.
விஜிதா ஓயில் ஸ்ரோர்ஸ், 5-ம் குறுக்குத்தெரு, புறக்கோட்டை.
ஆண்டியம்பலம் ஓயில் ஸ்ரோர்ஸ், 5-ம் குறுக்குத்தெரு, புறக்கோட்டை.
எஸ். வி. வெள்ளையன் செட்டி அன் சன்ஸ், ஆட்டுப்பட்டித்தெரு, புறக்கோட்டை.
எஸ். இ. கணபதி அன் கோ, ஆட்டுப்பட்டித்தெரு, புறக்கோட்டை
ஏ. கே. எம். தேவராயபிள்ளை அன் கோ, காஸ் வார்க்ஸ் தெரு, புறக்கோட்டை.
ஸ்ரீ கிருஷ்ணு ஓயில் ஸ்ரோர்ஸ், 5-ம் குறுக்குத்தெரு. புறக்கோட்டை,
எஸ் அருணசலம் செட்டி, 5-ம் குறுக்குத்தெரு, புறக்கோட்டை.
எஸ். பி. எஸ். சீனிவாசகம் செட்டி, ஆட்டுப்பட்டித்தெரு, புறக்கோட்டை.
ஏ. ஆர். ரி. ஆறுமுகம் அன் கோ, 4-ம் குறுக்குத்தெரு, புறக்கோட்டை.
மாணிக்கம், பிரதர்ஸ், 4-ம் குறுக்குத்தெரு, புறக்கோட்டை.
ஏ. எம். எஸ் நயினர் செட்டியார் அன் கோ, 4-ம் குறுக்குத்தெரு, புறக்கோட்டை.
கே. பி. கே. சுடலையாண்டி செட்டியார், ஆட்டுப்பட்டித் தெரு, புறக்கோட்டை.

அத்துடன் வேறு மிருகஉணவுகளை சேர்த்து வைத்திருப்பவர்கள் தீவடங்கிலும் உண்டு.

வியாபார விசாரணைகள்

ஜா எல மில்ஸ், ஜாஎல. மாக்கஸ் மில்ஸ், பேலியகொட.



# "வரவு-செலவு திட்டம் தயாரிப்பதே என் முதல்வேலை"

— என். எம்

கொழும்பு, வெள்ளி

'வரவு செலவு திட்டத்தை தயார் செய்வதுதான் என் முதல் வேலை' என்று அரசாங்க குமாஸ்தாக்கள்சேவை சங்க கோஷ்டியிடம் புதிய நிதி மந்திரி டாக்டர் என். எம். பெரேரா நேற்று தெரிவித்தார்.

நிதி அமைச்சின் காரியாலயத்தில் அக்கோஷ்டியிடம் டாக்டர் பெரேரா மேலும் தெரிவித்ததாவது: வரவுசெலவு திட்டத்தை தயாரிப்பதில்,மற்றவைகளிலும் பார்க்க எனது கருத்து வேறுபாடானது என்பது எல்லோருக்கும் தெரியும். வரவு செலவுத்திட்டத்தை தயாரிப்பதில், திறைசேரியை மட்டும் நான் கலந்தாலோசிக்கப்போவதில்லை. குமாஸ்தாக்கள் முதல் தொழிலாளர்வரை கலந் தாலோசிக்கப் போகிறேன்.

சங்க அங்கத்தவர்களுடனும், உத்தியோகத்தர்களுடனும், திறைசேரி தொழிலாளர்களுடனும் டாக்டர் என். எம். பெரேரா தனிப்பட்ட முறையில் பேசும்போது, அவர்களின் பூரண ஒத்துழைப்பைத் தருமாறு கேட்டுக்கொண்டார்.

தனது வேலைகளை ஆரம்பிக்கும்வரை பொறுமையாக இருக்கும்படியும் நிதிமந்திரி தெரிவித்தார்.

தொழிற்சங்கங்களுக்கு உற்சாகமளிப்பது மட்டுமன்றி, அவைகளுக்கு முழு மூச்சாக உதவியளிக்கப் போவதாகவும், எல்லோரும் கடுமையாக உழைக்க வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசும் போது' எல்லோரின் நன்மைக்காகவும், நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாக பணியாற்ற வேண்டுமென்று தெரிவித்தார்.

## விஞ்ஞானி கந்தையாவுக்கு வரவேற்பு

உடுப்பிட்டி, வெள்ளி

உடுப்பிட்டியைச் சேர்ந்தவரும் பிரபல அணு இயக்கவியல் ஆராய்ச்சியாளருமான விஞ்ஞானி திரு. கே. கந்தையாவுக்கு கரணவாய் வடக்கு சைவவித்தியாசாலையில் ஒரு மகத்தான வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

அவர் பிறந்த ஊரென்ற முறையில் அவரது குடும்பத்தைக் கௌரவிக்கும்பொருட்டு கீழைத்தேச நடனம், கரகம், காவடி முதலிய கலைநிகழ்ச்சிகள் இடம்பெறுமெனத் தெரிய வருகிறது.

இவ்வரவேற்பு வைபவத்திற்கான ஏற்பாடுகளை உதவி பொலிஸ் அதிபர் திரு. வீ. க. ஆறுமுகம் கவனித்துவருகிறார்.

## இலங்கைக்கு யூகோ டிராக்டர்கள்

கொழும்பு, வியாழன்

8 லட்சம் பவுன் மதிப்புள்ள 600 டிராக்டர்களை யூகோஸ்லேவியா இலங்கைக்கு வழங்கவிருக்கிறது. இந்த ஆண்டு 100 டிராக்டர்களும், அடுத்த ஆண்டு 200 டிராக்டர்களும் 1966-ம் ஆண்டு 300 டிராக்டர்களும் சப்ளை செய்யப்படும்.

REGAL — JAFFNA
NOW SHOWING
Daily 3 Shows. Sats & SunsFour
Cameron Mitchell
IN
The Last of The VIKINGS
(Totalscope – Eastmancolor)

இப்பொழுது திரையிடப்படுகிறது !
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
ராஜ் (நீர்கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)
தினசரி 3 காட்சிகள் 2-30, 6-30, 10-30
ஸ்ரீகிருஷ்ண (திருமலை) ஜுப்பிட்டர் (குருணைகலை) தாஜ்மஹால் (கல்முனை)
எஸ். எஸ். ராஜேந்திரன் - விஜயகுமாரி
ராதா - ராஜன் - புஷ்பலதா
நடிக்கும்

முருகன் பிரதர்ஸ்
நானும் ஒரு பெண்

# கரணவாயில் துப்பாக்கிச்சூடு

உடுப்பிட்டி, வெள்ளி

கரணவாயில் மண்டான் என்னுமிடத்தில் இரு தரப்பினருக்கிடையே ஏற்பட்ட சண்டை பெரும் கைகலப்பாக மாறி இறுதியில் துப்பாக்கிச் சூடுவரை சென்றுவிட்டது.

இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மூவர் காயமுற்றனர். எதிரிகள் ஒருவரின் வீட்டினுள் புகுந்து அங்கிருந்த நாய், பூனை, கோழி முதலியவற்றைச் சுட்டதின் விளைவாக அவை அக்கணமே பலியாகின. காயமுற்றவர்கள் அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எதிரிகள் இன்னும் தலைமறைவாகவே இருக்கின்றனர். பொலிசார் தீவிர புலன் விசாரணை செய்வதுடன் இரவில் ரோந்து புரிகின்றனர். இச் சம்பவத்தையடுத்து இப்பகுதி மக்கள் மிகவும் பீதியடைந்துள்ளனர்.

## கிராமசபைத் தேர்தல்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

இம்மாதம் பல கிராமசபைகளின் தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன. அவற்றின் திகதி விபரம் வருமாறு:-

கொக்குவில் 10-ம் வட்டாரம்: ஜூன் 23, மயிலிட்டி: ஜூன் 22, பூநகரி: ஜூன் 27, பண்டத்தரிப்பு: ஜூன் 25, புலோப்பளை: ஜூன் 29.

## லிகிதர்கள் ஆரவாரம்!

கொழும்பு, சனி

அரசாங்க பொதுச் சேவை தொழிற் சங்க காரியதரிசி திரு. ஐ. ஏ. விக்கிரம, புதிய நிதி மந்திரி டாக்டர் என். எம். பெரேராவிற்கு தங்களின் முழு ஒத்துழைப்பையும் வழங்க ஏற்கனவே தீர்மானித்திருந்ததாக தெரிவித்தார்.

புதிய நிதி அமைச்சரான டாக்டர் என். எம். பெரேரா நிதி அமைச்சு காரியாலயத்திற்கு சென்ற பொழுது, திறைசேரி, நிதி அமைச்சு காரியாலய லிகிதர்கள் அவரை சுற்றி வளைத்துக் கொண்டு ஆரவாரம் செய்து கோஷமிட்டனர். அரசாங்க குமாஸ்தாக்கள் சேவை சங்க சார்பில் திரு. தஸநாயக்கா புதிய நிதி மந்திரியிடம் வெற்றிலை கொடுத்து வரவேற்றார்.

நிதி அமைச்சு காரியாலயத்தில் முன்னாள் நிதிமந்திரி திரு. ரி. பி. இலங்கரத்ன, புதிய நிதி மந்திரி டாக்டர் என். எம். பெரேராவை வரவேற்று திறைசேரி உத்தியோகத்தர்களை அறிமுகம் செய்துவைத்தார்.

## தொழிற் சங்கங்களிடம் ஒத்துழைப்பு கோருவோன்

— அனில்

கொழும்பு, வெள்ளி

எல்லா தொழிற்சங்கங்களையும் அழைத்து கட்சி பாகுபாடு காட்டாது அவர்களின் முழு ஒத்துழைப்பையும் தருமாறு கேட்கப் போவதாக புதிய போக்குவரத்து மந்திரி திரு. அனில் முனசிங்க தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து அமைச்சு காரியாலய உத்தியோகத்தர் மத்தியில் பேசும்போது திரு. அனில் முனசிங்கா கூறியதாவது:

எனக்கு முன்பு இங்கு கடமையாற்றிய மந்திரிக்கு நீங்கள் அளித்த ஒத்துழைப்பை தொடர்ந்து எனக்கும் அளிப்பீர்கள் என திடமாக நம்புகிறேன். இன்று உங்களை நேரடியாக சந்தித்ததையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இங்குள்ள எவராவது எந்த விதமான திட்டங்களையும் தெரிவிக்க விரும்பினால் நேரடியாக என்னிடம் வந்து தெரிவிக்கலாம்.

அரியாலையில்

# சனசமூகநிலைய ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

அரியாலை சனசமூகநிலையத்தின் 15 வது ஆண்டுவிழா இம்மாதம், 13, 14-ம் திகதிகளில் அரியாலையில் நடைபெறவிருக்கிறது. முதல்நாள் விழாவின் காலை முதல் நிகழ்ச்சியாகி ஆறுமணிக்கு யாழ்ப்பாண வீரர்களுக்கான 10 மைல் மரதன் ஓட்டப் போட்டியும், ஒன்பதுமணிக்குக் கொடியேற்று வைபவமும், மாலை ஏழுமணிக்கு நாடகப்போட்டிகளும் நடைபெறும். இரண்டாம் நாள் விழாவின் முதல் நிகழ்ச்சியாக காலை ஆறு மணிக்கு யாழ்ப்பாண வீரர்களுக்கான 25 மைல் சாதாரண சயிக்கிள் ஓட்டப் போட்டியும், மாலை நிலைய அங்கத்தவர்களுக்கான பலவிதமான போட்டிகளும் நடைபெறும்.

யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர்திரு. ஆ. பெருமையினர் மாலை ஆறுமணிக்கு நடைபெறும் பொதுக்கூட்டத்துக்குத் தலைமைவகித்து வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்குவார்.

இரவு எட்டுமணிக்கு அரியாலை முன்னணி நடிகர்கள் தோன்றி நடிக்கும் 'இலங்கேஸ்வரன்' என்னும் சரித்திர நாடகம் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் பாடசாலைகளில்

## சிங்கள ஆசிரியர்கள் ஆகஸ்டில் நியமனம்

கொழும்பு, வெள்ளி

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் பாடசாலைக்ளில், சிங்கள தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் ஆகஸ்ட் மாதம் முதல் நியமிக்கப்படுவார்கள்.

2000 சிங்கள தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களை தேர்ந்தெடுப்பதற்காக, அடுத்த வாரம் கல்வி இலாகா விண்ணப்பம் கோரும். தமிழ் மொழியை எழுதவும், படிக்கவும் தெரிந்தவர்கள், சிங்கள ஆசிரியர்களாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவர்களுக்கு மாதம் 150 ரூபா சம்பளம் வழங்கப்படும். இவர்கள் தமிழ் மாணவர்களுக்கு சிங்கள மொழியை போதிப்பார்கள்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மட்டுமன்றி மற்ற மாகாணங்களிலுமுள்ள தமிழ் பாடசாலைகளுக்கும், சிங்கள ஆசிரியர்களை நியமிக்க, கல்வி இலாகா ஒழுங்குசெய்துவருகிறது.

சிங்கள பாடசாலைகளில் மேலதிகமாக இருக்கும் சிங்கள ஆசிரியர்கள் தமிழ் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படுவார்கள்.

# எதிர்க் கட்சித் தலைவர்கள் கருத்து

கொழும்பு, வெள்ளி

புதிய கூட்டு அரசாங்கம் பற்றிஎதிர்க்கட்சித்தலைவர்கள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:-

ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, சுதந்திர—சமசமாஜ கூட்டு அரசாங்கம் பற்றி தான் ஏற்கனவே தமது கருத்தை பொதுக் கூட்டங்களில் தெரிவித்ததாகவும், இதுசம்பந்தமாக மேலும் கருத்துத் தெரிவிக்கவில்லையென்றும் கூறினர்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிக் காரியதரிசி திரு. பீட்டர் கெனமன் புதிய கூட்டரசாங்கம் பற்றி எவ்வித கருத்தும் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

சமஷ்டி கட்சியைச் சேர்ந்த டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் கருத்துத் தெரிவிக்குமுன் புதிய அரசாங்கத்தின் நடவடிக்கைகளை மிகவும் கவனமாக பொறுத்திருந்து பார்க்கப் போவதாகத் தெரிவித்தார்.

எம். ஈ. பி. தலைவரான திரு. பிலிப் குணவர்த்தன கொழும்பில் இல்லை. எம். ஈ. பி. காரியதரிசி திரு எம். பி. டி. பெரேரா கூட்டரசாங்கம் பற்றி எவ்வித கருத்தும் தெரிவிக்க விரும்பவில்லை. திரு. ரூபர்ட் குணவர்த்தன, சுதந்திரக்கட்சி—சமசமாஜக் கட்சி கூட்டரசாங்கம் வலதுசாரிகளை மட்டும் பலப்படுத்த உதவுமென்றும், இது தொழிலாளர் வர்க்கத்திற்கு மற்றொரு பேரிடியென்றும், சரித்திரம் இதை நிரூபிக்குமென்றும் கூறினர்.

## நிதிமந்திரியுடன் ஒத்துழைப்போம்

கொழும்பு, வெள்ளி

அரசாங்க குமாஸ்தாக்கள் சேவைச் சங்கத் தலைவர் திரு. ரி. பி. திஸநாயக்கா, நிதி மந்திரி டாக்டர் என். எம். பெரேராவிடம் தமது சங்கத்தின் சார்பாக முழு ஒத்துழைப்பையும் தருவதாக வாக்குறுதியளித்தார்.

தங்களிடம் சில பிரச்னைகள் இருப்பதாகவும், தருணம் வரும்போது அப்பிரச்னைகளை நிதிமந்திரியிடம் சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்தனர். திறைசேரியிலுள்ள சில உயர்தர உத்தியோகத்தர்கள் தங்களுடன் ஒத்துழைப்பதில்லையென்றும் இதுசம்பந்தமாக புதிய நிதி மந்திரி கவனம் செலுத்துவார் எனத் தாம் நம்புவதாகவும் தெரிவித்தார்.

★ திருமண விழாக்கள்
★ புதுமனைப் பிரவேசம்
★ புதுமனைக்கு அத்திவாரமிடல்
★ கோவில்அபிஷேகம், திருவிழாக்கள்

முதலிய வைபவங்களுக்கேற்ற சகலவிதமான சாமான்களும் எம்மிடம் மலிவாகவும், சுத்தமாகவும், நாணயமாகவும் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்படி வைபவங்களுக்குத் தேவைப்படும் அபிஷேகத் திரவியங்கள், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை, புனுகு, ஜவ்வாது, சூடம், சாம்பிராணி, ஊதுபத்தி, வாசனாதிகள், பன்னீர், அத்தர், நவரத்தினம், பஞ்சலோகம் முதலிய சகல சமான்களும் சந்தனம், குங்குமம், சாந்துப் பொட்டுகள் முதலியனவும் தங்கள் திருப்திக்கேற்ற வகையில் மலிவாக எம்மிடம் கிடைக்கும்

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
53, காங்கேசன்துறை வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்.
160, செட்டியார் தெரு, கொழும்பு-11.
(தொலை பேசி எண்: 541)

கூட்டாட்சி

# "உடனடியாக ஒன்றும் சொல்வதற்கில்லை"

-- எஸ். ஜே. வி.

கொழும்பு, வெள்ளி

தமிழ் பேசும் மக்களை எதிர்நோக்கியுள்ள மொழிப் பிரச்னைக்கு நேர்மையான முறையில் தீர்வுகாணப்படுமென்று இவ்வருட ஆரம்பத்தில் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா வாக்குறுதியளித்திருந்தார். மொழிப்பிரச்னைக்கும் மற்றும் முக்கிய பிரச்னைகளுக்கும் நீதியான முறையில் தீர்வுகாண வேண்டியது பிரதமருடையதும் அவரது அரசாங்கத்தினதும் முக்கிய கடமையாகுமென்று தமிழரசுக் கட்சித் தலைவர் திரு.எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தெரிவித்துள்ளார்.

புதிய கூட்டரசு சம்பந்தமாக இவ்வளவு விரைவாக எதுவும் சொல்ல முடியாது என்றும் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தெரிவித்துள்ளார்.

"தமிழ் பேசும் மக்களை எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்னைகளை புதிய கூட்டரசாங்கம் எவ்விதம் நோக்குகிறதென்பதைப் பொறுத்துத்தான் எனது கட்சியும், தமிழ் மக்களும் எந்தவிதமான அபிப்பிராயமும் சொல்லமுடியும்" என்றும் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் பேசும் மக்களினது நல்லெண்ணத்தை கூட்டரசாங்கம் பெறவேண்டுமென்றால் கட்டாய ஓய்வு உத்தரவுகள் வழங்குவதை உடனடியாக நிறுத்தவேண்டும். அதனுடன் மட்டுமின்றி தமிழ் பேசும் மக்களைப் பாதிக்கும் மொழிப் பிரச்னைக்கு ஒரு தீர்வைக் காண்பதுடன் பிரஜா உரிமை போன்ற விஷயங்களும் விரைவாகத் தீர்க்கப்படவேண்டும் என்றும் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தெரிவித்துள்ளார்.

**புரட்சி பிரிவினர் எதிர்ப்பு**

டாக்டர் என்.எம். பெரேரா, திரு. லெஸ்லி குணவர்த்தன, டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா ஆகியோரும் அவர்களது கட்சியும் தொழிலாள வகுப்பினரை ஏமாற்றி நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டனர் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி—லங்கா சமசமாஜக் கட்சி கூட்டரசாங்கம் சம்பந்தமாக லங்கா சமசமாஜ (புரட்சி பிரிவினர்) கட்சி விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

"பதினன்கு அம்சத்திட்டத்திலுள்ள மூன்று அம்சங்கள் குறித்தும் லங்கா சமசமாஜக் கட்சியின் மகாநாட்டில் எந்தவித அபிப்பிராயமும் தெரிவிக்கப்படவில்லை. இந்த மூன்று அம்சங்களும் மதம், மொழி, பிரஜாவுரிமை சம்பந்தப்பட்டவை. தொழிலாளர் வகுப்பினருக்காகப் பாடுபடுவோம் என்று கூறிய டாக்டர் என். பெரேராவும் அவரது கோஷ்டியினரும் நடுத்தர வகுப்பினரின் நலன்களைக் கவனிக்கும் அரசாங்கத்திடம் சரணடைந்துவிட்டனர். என். எம். பெரேரா, கொல்வின் ஆர். டி சில்வா, லெஸ்லி குணவர்த்தன ஆகியோர் இலங்கை சிறுபான்மையோரின் ஜனநாயக உரிமைகளுக்காக இனி பாடுபடமாட்டார்கள்" என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கை மேலும் கூறுவதாவது:-

"தனியார்துறையில் வேலைபார்க்கும் தொழிலாளர்கள் தங்களது கோரிக்கைகள் எதுவும் நிறைவேறும் என்று எண்ணியதெல்லாம் ஏமாற்றமாகவே முடிந்திருக்கிறது. ஆனால் அரசாங்கத்துறைகளில் வேலைபார்க்கும் தொழிலாளர்கள், கமிட்டிகள் அமைக்கவும் தங்களது இலாகாத் தலைவர்களுக்கு ஆலோசனை கூறவும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கு காணிகள் கிடைக்கவோ அல்லது வேலை வசதி பெறவோ எந்தவித வாக்குறுதியும் அளிக்கப்படவில்லை. கிராமக்கமிட்டிகள் மட்டும் இவர்களுக்கு நிறுவிக்கொடுக்கப்படும். ஆனல் இக்கமிட்டிகள் மூலம், அரசாங்கத்திடமிருந்து என்ன நன்மை பெற முடியும்?"

**தஹநாயக்கா வாழ்த்து**

கூட்டரசாங்கத்துக்கு தமது வாழ்த்துக்களைத் தெரிவித்த காலி எம். பி.யும், முன்னள் இலங்கைப்பிரதமருமான டாக்டர் டபிள்யு. தகநாயக்கா, சிம்மாசனப்பிரசங்கத்தில் தெரிவித்திருந்ததுபோல் வேலையில்லாத் திண்டாட்டம், வாழ்க்கைச்செலவு, வீட்டுப்பிரச்னை ஆகியவை உடனடியாகத் தீர்க்கப்படவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

"புதிய மூன்று மந்திரிகளையும் நான் வாழ்த்துகின்றேன் எவ்விததாமதமுமின்றி வேலையில்லாப்பிரச்னை, வாழ்க்கைச் செலவு பிரச்னை ஆகியவற்றுக்கு தீர்வு காண முயற்சிக்குமாறு மூன்று மந்திரிகளையும் நான் கேட்டுக்கொள்கின்றேன்" என்றும் திரு. தஹநாயக்கா தெரிவித்துள்ளார்.

## ஆட்சேபக் கூட்டம்

கொழும்பு, வெள்ளி

ஸ்ரீ லங்கா பிக்குகள் காங்கிரஸ், ஸ்ரீ லங்கா மகா மகேந்திர சங்க சபா ஆகியவை சேர்ந்து நாளை மாலை 3 மணிக்கு புதிய நகர மண்டபத்தில் கூட்டரசாங்கத்தை ஆட்சேபித்து கூட்டமொன்றை நடத்தவிருக்கின்றன.

## கோரிக்கைகளை ஆராய மகாநாடு

யாழ்ப்பாணம், சனி

அகில இலங்கை சுகாதார இலாகா தொழிற் சங்க யாழ்ப்பாண கிளையின் கோரிக்கைகள் சம்பந்தமாக ஆராயும் பொருட்டு இன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் டாக்டர் நதானியல் ஒரு மகாநாடு கூட்டுகிறார்.

கடந்த மாதம் 28-ம் திகதி நடைபெற்ற பொதுக்கூட்டத் தீர்மானத்தின்படி கோரிக்கைகள் சம்பந்தமாக ஒரு முடிவிற்குவர 14 நாள் அவகாசம் வழங்கப்பட்டது. 14 நாட்களுக்குள் ஒரு சுமுகமான முடிவு காணப்படாவிட்டால் வேலை நிறுத்தம் செய்வதெனவும் பொதுக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

## தமக்கு . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாலயத்துக்குச் சென்றார். பட்டாஸ்கள் வெடித்து அவருக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

மற்றும் இரு சமசமாஜ மந்திரிகளும் இன்று காலை தங்கள் காரியாலயங்களில் வேலை ஆரம்பித்தார்கள்.

டாக்டர் பெரேரா தன் வழக்கமான உடையான புஷ்ஷேர்ட், கால்சட்டையுடன் காரியாலயம் சென்றார். திறைசேரி காரியதரிசி திரு. ஜினதாச சமரக்கொடி, திறைசேரி பொருளாதாரப் பிரிவுத் தலைவர் திரு. திலக் குணரத்தன, டாக்டர் ஜே. பி. கெலகம, திரு. டேவிட் லூஸ், அரசாங்க அச்சகர் திரு. பெர்னர்ட் சொய்ஸா ஆகிய சிரேஷ்ட அதிகாரிகளுடன் டாக்டர் பெரேரா சம்பாஷனை நடத்தியதே அவரது முதலாவது வேலையாய் இருந்தது.

# "அரசியல் திட்டத்தை திருத்த வேண்டும்"

## புதிய மந்திரிசபைக்கு தகநாயகா யோசனை

காலி, வெள்ளி

"இலங்கை அரசியல் திட்டத்தைத் திருத்துவதுதான் புதிய கூட்டரசாங்கத்தின் முதல் வேலையாக இருக்கவேண்டும்" என்று காலி எம். பி.யும், முன்னள் பிரதம மந்திரியுமான டாக்டர் டபிள்யு. தஹநாயகா நேற்றிரவு புதிய அரசாங்கம் பற்றி நமது நிருபரிடம் கருத்துத் தெரிவிக்கையில் கூறினர்.

இலங்கை அரசியலமைப்புத் திட்டத்தைத் திருத்தவேண்டுமென்பதை எல்லோரும் உணர்ந்துள்ளனர். அரசியல் திட்டத்தைத் திருத்துவதற்கான ஆலோசனைகளைத் தெரிவிக்கும்பொருட்டு இரண்டு தடவைகள் பார்லிமெண்ட் குழு நியமிக்கப்பட்டபோதிலும் பார்லிமெண்ட் ஒத்திவைக்கப்பட்டதால் அவை உருப்பெறவில்லை. புதிய மந்திரிசபை தனது முதல் நிகழ்ச்சியாக அரசியல்திட்டத்தைத் திருத்த வேண்டும் என்று டாக்டர் தஹநாயகா கூறினர்.

## இன்று

சுழிபுரம் அறுபத்து மூவர் குருபூஜை மடத்தில் சேக்கிழார் சுவாமிகள் குருபூஜை நடைபெறும். நண்பகல் மகேசுர பூஜையும் பிற்பகல் 5 மணிக்கு புராணபடனமும் நடைபெறும்

●

பன்னலை ஞானவைரவர் ஆலயக் கூட்டுப்பிரார்த்தனைச் சபையினர் சேக்கிழார் மகாநாடொன்றினை நடாத்துவர். வித்துவான் க. வேந்தனர், பண்டிதர் க. கி. நடராஜன், பண்டிதர் மு. கந்தையா, வித்துவான் பொன் முத்துக்குமாரன், பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை, பண்டிதைகள்: சத்தியதேவி துரைசிங்கம், தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள். திரு. சீ. வினசித்தம்பி கதாகாலக்ஷேபம் செய்வார். நாதஸ்வர வித்துவான் என். கே. பத்மநாதன் பட்டமளித்துக் கௌரவிக்கப்படுவார்.

●

பிற்பகல் 4-30மணிக்கு இரட்டைக் குடிசைமைதானத்தில் திரு. பி. டி. சிறிசேன தலைமையில் விசேஷ பொதுக்கூட்டம் நடைபெறும். இலங்கை தொழிற்சங்க சம்மேளனப் பொதுச் செயலாளர் திரு. நா. சண்முகதாசன் பேசுவார்.

●

இணுவில் தெற்கு ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில்பூங்காவனத் திருவிழா இன்று சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது. இன்னிசைக் கச்சேரியும், மேளக் கச்சேரியும் விழாவில் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது

●

அகில இலங்கை சுகாதார இலாகா தொழிற் சங்க பொதுக் கூட்டம் இன்று மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியிலுள்ள மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக கொழும்பிலிருந்தும் பிரதிநிதிகள் வருவார்களென அறியப்படுகிறது;

## நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றி கூட்டம்

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன்துறைப் பட்டினசபைத் தலைவர் திரு மு. திடவீரசிங்கம் மீது ஐந்து அங்கத்தவர்கள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் சம்பந்தமாக விவாதிப்பதற்கு ஓர் விசேட கூட்டத்தை வருகிற 16-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கூட்டவிருப்பதாக யாழ். ம. வட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் சபையின் அங்கத்தவர்களுக்கு உத்தியோகபூர்வமாக எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

## கதிர்காமத்திற்கு பஸ் சேவை

ஹொறணை, வெள்ளி

ஹொறணையிலுள்ள பஸ் பிரயாணிகள் சங்கம், பிரயாணிகளை பஸ் மூலம் கோஷ்டியாக கதிர்காமத்திற்கு அனுப்புவதற்கான ஒழுங்குகளைச் செய்துவருகிறது.

ஒவ்வொரு சனிக்கிழமையும் ஹொரணையிலிருந்து கதிர்காமத்திற்கு பஸ் சேவையை நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. முதலாவது பஸ் சேவை அடுத்த மாதம் ஆரம்பமாகும்.

# 'கற்றதனாலாய பயனென்ன சுகாதாரம் இல்லையே'

## மேயர் வருத்தம்

நல்லூர், வெள்ளி

யாழ்ப்பாண நகரில் கல்வியறிவுள்ள மக்கள் நிறைந்திருந்ததும் கர்ப்பச் சிதைவு, பிரசவ கால அகாலமரணங்கள், சிசுமரணங்கள் என்பனவற்றைப் பூரணமாக ஒழிக்காமல் இருப்பது வருத்தத்துக்குரியது என்று யாழ்ப்பாணம் மேயர் திரு. டி. எஸ். துரைராஜா மக்கள் சுகாதாரவார விழாவையொட்டி விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

யாழ். மாநகரசபையின் சுகாதாரவாரக் கொண்டாட்ட நிகழ்ச்சிகள் மாநகர சபையின் பல பகுதிகளிலும் நடத்தப்பட்டு வருகின்றன. இறுதி நிகழ்ச்சி வருகிற திங்கட்கிழமை மாலை யாழ்ப்பாணம் எம். பி. திரு. அல்பிரட் துரையப்பா தலைமையில் மாநகரசபை மண்டபத்தில் நடைபெறுகிறது.

யாழ். மேயர் திரு. துரைராஜா இது சம்பந்தமாக விடுத்துள்ள அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"நாட்டின் செல்வச் சிறப்பிற்கு முக்கிய முதன்மைப் பொருளாக விளங்கும் கர்ப்பிணிகளின் தேகாரோக்கியத்தில் சிரத்தை காண்பிக்கப்படுவது அவசியமாகும். ஒரு நாட்டு இனத்தின் வருங்காலம் வருடகாலச் சிறாரின் எதிர்காலத்திலேயே பெரிதும் தங்கியுள்ளது. எதிர்காலத்தில் பிறக்கவிருக்கும் குழந்தைச் செல்வங்களின் ஆரோக்கிய வாழ்வு கர்ப்பிணிகளின் ஆரோக்கியத்திலே தங்கியுள்ளது.

வெகுசாதாரணமாகக் கடைப் பிடிக்கத்தக்க ஆரோக்கிய விதிமுறைகளை முறையாக நடைமுறையில் கையாளுவதன் மூலமே கர்ப்பிணிகளுக்கும் சிசுக்களுக்கும் சம்பவிக்கக் கூடிய இன்னமும் சம்பவித்து வருகின்ற அகால மரணங்களை முற்றாக ஒழித்தல் கூடும்.

யாழ்ப்பாண நகரத்தில் இன்னமும் குடியிருப்போர் சிலர் தம் சுற்றச் சூழலின் சுத்தத்தைப் பேணுகிறார்கள் இல்லை என்பது வருத்தத்திற்குரியது. இம்மனப்போக்கானது வெளியிடங்களிலிருந்து தமிழர் தலைப்பட்டினமான யாழ் நகருக்கு வருகை தருபவர்களை தமிழ்பேசும் மக்களையிட்டு இழிவாக எண்ணும்படி செய்யும். அவ்வாறு தமிழ்பேசும் இனத்தை அடுத்தவர் முன்னிலையில் தலைகுனியவைக்கும் இந்த அவலநிலையை மேலும் வளரவிடாது காக்கும்படி குடியியல் பண்பும், பொறுப்புணர்ச்சியும் மிக்க மாநகரசபை மக்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நகரின் சௌக்கிய சூழலுக்குக் கேடுநேராததும் அதன் அழகுக்கு பங்கம் ஏற்படாததும் அழுக்குகளை அதற்குரிய வாளிகளில் போடவேண்டும், ஈழத்தமிழ் பேசும் மக்களின் பிரதான பட்டினமாக விளங்கும் யாழ். நகரம் தற்கால நகரங்கள் யாவற்றிலும் சிறந்து விளங்கும் வண்ணம் மாநகர சபையுடன் பொது மக்கள் ஒத்துழைக்கவேண்டும்.

## லஞ்சத்தை ஒழிக்க ஒத்துழைப்பு அவசியம்

கொழும்பு, வெள்ளி

லஞ்சத்தையும், மோசடியையும் முற்றாக ஒழிப்பதற்கு, தொழிலாளர்களினதும் எல்லா தொழிற் சங்கங்களினதும் பூரண ஒத்துழைப்பு அவசியமென்று புதிய பொது வேலை பகுதி மந்திரி திரு. சமி குணவர்த்தன தெரிவித்தார்.

எனது இலாகாவில் எந்தவிதமான லஞ்சத்தையும் மோசடியையும் தான் அனுமதிக்க போவதில்லையென்றும் இவை சம்பந்தமாக கடும் நடவடிக்கை எடுக்கப் போவதாகவும், ஒருமுறை தான் உத்தரவிட்டால், அந்த உத்தரவு நிச்சயம் செயல் படுத்தப்படுமென்றும் அவர் கூறினர்.

## நிதிமந்திரியை மேயர் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சனுடன் தமிழ் மக்களின் பிரச்னைகளை தீர்க்கப் பாடுபடுவார் என நம்புகிறோம். கடந்த காலத்தில் தமிழ்மக்களுக்குசெய்ததுபோல தொடர்ந்தும் உதவி செய்வார் என எதிர்பார்க்கிறோம்.

பாராட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது:

## சுகாதாரவாரம்

மாவிட்டபுரம், வெள்ளி

வலி வடக்கு தெல்லிப்பழை சுகாதாரப் பகுதியில் மக்கள் சுகாதாரவார இறுதிக் கொண்டாட்டங்கள் இன்றும், நாளையும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கொண்டாடப்படும். பொருட்காட்சி பகிரங்கக்கூட்டம், கதம்பக் கச்சேரி ஆகியன நடைபெறும். தெல்லிப்பழை சுகாதாரப் பகுதி மருத்துவ மாணவிகளின் நாடகமும் நடைபெறும்.

## புதிய நிதிமந்திரி தம் தொகுதிக்கு விஜயம்

கொழும்பு, வெள்ளி

புதிய நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேரா நாளை தனது தொகுதியான எட்டியாந்தோட்டைக்கு விஜயம் செய்கிறார். எட்டியாந்தோட்டை மகாவித்தியாலய வருடாந்தக்கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு அவர் பரிசுகளை வழங்குவார். அங்கு அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## மரண அறிவித்தல்

**திரு. வி. எஸ். நாகலிங்கம்**

முன்னள் வட ஒம்மினி பஸ் கம்பனி நிர்வாகஸ்தரும், சிவயோகத்தின் அருமைக் கணவரும், தியாகராசா (இ. போ. ச. யாழ். மேற்கு நிலையம்), மூதூர் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த விசயகாந்தன், அகிலேஸ்வரி, நாகேஸ்வரி, புவனேஸ்வரி, சோமேஸ்வரி ஆகியோரின் தந்தையும், மட்டுநகர் சௌக்கிய பகுதி நடராசாவின் மாமனும், திரு. சேனாதிராசாவின் மைத்துனர் ஆகிய திரு. வி.எஸ்.நாகலிங்கம் காலமாகிவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-ந் திகதி காலை 10-00 மணிக்குக் கோம்பையன் மணல் மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உறவினரும் நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும். நா. தியாகராசா, "தினப்புனம்", 132, கோவில் வீதி, நல்லூர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஜூன் மாதம் 13-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.